# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my | Media_Selangor | SelangorTV selangortv.my | MediaSelangor | SMART SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் சித்திரை மாதம் / ஜூன் 05/2023 / June 06/2023




# அடையாள பத்திரப்

## பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் அளப்பரிய பங்காற்றும் மை செல்

**ஷா ஆலம்,** சிலாங்கூரில் அடையாளம் ஆவணங்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர் நோக்கும் மாநில மக்களுக்கு உதவும் பணியினை மைசெல் பிரிவு மிகவும் ஆக்ககரமான முறையில் மேற்கொண்டு வருகிறது.

மக்களிடையே குறிப்பாக இந்திய சமூகத்தில் அதிகம் காணப்படும் அடையாளப் பத்திரங்கள் இல்லாதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த மைசெல் கடந்த 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதாக அதன் நிர்வாகிகளில் ஒருவரான திருமதி வி.சாந்தா கூறினார்.

மைகாட் எனப்படும் அடையாளக் கார்டு இல்லாமை, பிறப்புப் பத்திர மற்றும் குடியுரிமைச் சிக்கல், குழந்தை தத்தெடுப்பு, சிவப்பு அடையாளக் கார்டு பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்களுக்கு தீர்வு காண்பதை இந்த மைசெல் அமைப்பு பிரதான நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது என அவர் குறிப்பிட்டார்.

முறையான ஆவணங்கள் இல்லாமை, காலம் தாழ்த்தி அடையாளப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்வது போன்ற காரணங்களால் உரிய அடையாள பத்திரங்களைப் பெற்றுத் தருவதில் தாங்கள் சிரமத்தை எதிர்நோக்குவதாக அவர் சொன்னார். மாநிலம் முழுவதும் மைசெல் மூலம் நடத்தப்படும் மக்கள் சந்திப்பு நிகழ்வுகளின் வாயிலாக முறையான அடையாள ஆவணங்கள் இல்லாதவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு அந்த ஆவணங்களைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் செய்யும் விண்ணப்பத்தின் அடிப்படையில் உரிய ஆவணங்களைத் தயார் செய்து தேசிய பதிவுத் துறை அலுவலகங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று முறையாக விண்ணப்பம் செய்கிறோம் என்றார் அவர்.

விண்ணப்பம் செய்வோர் பொறுமையுடன் காத்திருந்து அதிகாரிகள் கேட்கும் ஆவணங்களை முறையாக வழங்கி மலாய் மொழி பேட்டியிலும் தேறினால் சில ஆண்டுகளில் அவர்களுக்கு அடையாளப் பத்திரங்கள் கிடைப்பதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். அடையாள ஆவணங்களைப் பெறுவதற்கு முகவர்களை நாடுவதை தவிர்க்கும்படி பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

அடையாளப் பத்திரங்கள் இல்லாதோர் அதற்கான விண்ணப்பத்தை செய்வதற்கு சிலாங்கூர் மாநில அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவின் அலுவலகத்தில் செயல்படும் மைசெல் பிரிவைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

## யாயாசன் ஹிஜ்ரா மூலம் 4,253 இந்திய தொழில் முனைவோர் பலன் அடைந்துள்ளனர்




**ஷா ஆலம்,** இந்த மார்ச் மாத நிலவரப்படி யாயாசன் ஹிஜ்ரா சிலாங்கூர் (ஹிஜ்ரா) பல்வேறு கடன் நிதித் திட்டங்கள் மூலம் மொத்தம் 4,253 இந்திய தொழில் முனைவோர் பலன் அடைந்துள்ளனர்.

"i-Bisnes, Zero to Hero, Niaga Darul Ehsan (NaDI), Go Digital, i-Lestari, I, i-Agro, i-bermusim" ஆகிய ஏழு திட்டங்களின் மூலம் வணிகங்களை மேம்படுத்த சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு RM52,000 க்கும் அதிகமான நிதி விநியோகிக்கப்பட்டது என்று அதன் செயல் தலைமை நிர்வாக அதிகாரி கூறினார். இதன் மூலம் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது, மாநிலத்தின் விரைவான முன்னேற்றத்திற்கு ஏற்ப இந்திய சமூகத்தின் வளர்ச்சியை உறுதி செய்யப்படும். 2015 ஆம் ஆண்டு நிறுவப் பட்டதில் இருந்து, ஹிஜ்ரா 55,834 தொழில் முனைவோருக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை RM710 மில்லியன் ஒதுக்கீட்டில் உதவியுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி சமர்ப்பித்த சிலாங்கூர் பட்ஜெட் 2023 இல் ஹிஜ்ரா திட்டத்தை மேம்படுத்தவும், தொழில் முனைவோர்களின் வளர்ச்சிக்கு உதவவும் RM130 மில்லியன் ஒதுக்கப்பட்டது. மக்களைக் கவனித்துக்கொள்வதற்கான திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற http://mikrokredit.selangor.gov.my/e-hijrah/login மற்றும் www.hijrahselangor.com என்ற இணைப்பில் மேலும் தகவலுக்குப் பார்வையிடலாம்.



# வணிகர்கள் பயன்பெறும் வகையில் "சித்தம்" திட்டங்கள் மறுசீரமைப்பு -

**ஷா ஆலம்,** அதிகமான இந்திய சிறு வணிகர்கள் பயன் பெறும் வகையில் "சித்தம்" எனப்படும் இந்திய தொழில் ஆர்வலர் மையம் தனது திட்டங்களை மறுசீரமைப்பு செய்யவிருக்கிறது.

இந்த சீரமைப்புத் திட்டத்தின் கீழ் **"சித்தம்"** அமைப்பினால் இதுநாள் வரை அமல்படுத்தப்பட்டு வந்த வர்த்தக உபகரண உதவித் திட்டம் "ராய்ஸ்" (**RISE**) என மறுவடிவம் பெறும் என்று அந்த அமைப்பின் நிர்வாகி எஸ்.கென்னத் சேம் கூறினார்.

இந்த "ராய்ஸ்" திட்டத்தின் கீழ் மலர் மற்றும் பலகாரம் உள்ளிட்ட வியாபாரங்களில் ஈடுபட்டு வரும் சிறு வியாபாரிகளுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும் அதே சமயம், அங்காடி வண்டி, குடை, சமையல் உபகரணம் போன்ற வியாபார அமைப்பிற்கு தேவையான உபகரணங்கள் அவர்களுக்கு வழங்கப்படும். இது மட்டுமின்றி அவர்கள் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு ஏதுவாக ஊராட்சி மன்ற லைசென்ஸ் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் அதிகளவில் பயன் பெறுவதற்காக இந்த திட்டத்தை தாங்கள் அறிமுகப்படுத்துவதாகக் கூறிய அவர், முதல் கட்டமாக இத்திட்டத்தை பரீட்சார்த்த முறையில் ஷா ஆலம், செக்சன் 18 ஆலய வளாகத்தில் விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகச் சொன்னார்.

இந்த புதிய திட்டத்திற்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் ஒப்புதல் அளித்துள்ளதாக சித்தம் நிர்வாகப் பொறுப்பினை புதிதாக ஏற்றுள்ள கென்னத் தெரிவித்தார்.

## இந்திய தொழில் துறைகளுக்கு ஒரு மாதத்தில் நல்ல செய்தி

**பத்து காஜா,** அந்நியத் தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கும் சிகையலங்கரிப்பு நிலையங்கள் ஜவுளிக் கடைகள் மற்றும் நகைக் கடைகளுக்கு இன்னும் ஒரு மாதத்தில் நல்ல செய்தி வரும் என்று மனித வள அமைச்சர் வ சிவகுமார் தெரிவித்தார். ஜவுளி, நகைக் கடை பொற்கொல்லர், சிகையலங்கரிப்பு ஆகிய தொழில் துறைகளுக்கான அந்நிய தொழிலாளர் பிரச்சினை பற்றாக்குறை நிலவுகிறது .

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் இந்த பிரச்சினை நிலவி வருகிறது. இதற்கு ஒரு தீர்வு காண உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தியோன் மற்றும் உள்நாட்டு வர்த்தக வாழ்க்கை செலவின அமைச்சர் டத்தோஸ்ரீ சாலாஹூடின் ஆயோப் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது..



இருந்தாலும் இதற்கு சிறந்த முறையில் தீர்வு காண வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது.

உள்துறை அமைச்சு, உள்நாட்டு வாணிப வாழ்க்கை செலவினத்துறை அமைச்சு, மனிதவள அமைச்சு ஆகியவை இந்த விவகாரத்திற்கு தீர்வு காணும் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று அவர் சொன்னார்.

கிட்டத்தட்ட அனைத்து நடவடிக்கைகளும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. விரைவில் மூன்று அமைச்சர்களும் இணைந்து இதற்கான அறிவிப்புகளையும் செய்வோம் என்று நேற்று பத்து காஜா நாடாளுமன்ற தொகுதியில் 31 பள்ளிவாசல்களுக்கு நிதியை வழங்கிய பின்னர் நிருபர்களிடம் அவர் இதனை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## முஸ்லீம் அல்லாதோருக்கும் கட்டாய திருமணப் பயிற்சி

**கோலாலம்பூர்,** முஸ்லீம் அல்லாத ஜோடிகளுக்குத் திருமணத்திற்கு முந்தையப் பயிற்சியை நடத்து வதை கட்டாயமாக்குவதற்கான சாத்தியம் ஆராய்ப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதுவாக செயல்குழு ஒன்றை அமைப்பதற்கான சாத்தியத்தை ஆராய மகளிர், சமூக மற்றும் குடும்ப மேம்பாட்டுத் துறை அமைச்சு செயலறிக்கையைத் தயாரித்து வருகிறது.

அந்த செயல்குழு முன்வைக்கும் பொருத்தமான பரிந்துரைகள் வெகு விரைவில் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் என்று மகளிர், குடும்ப மற்றும் சமூக மேம்பாட்டுத் துறை துணையமைச்சர் அய்மான் அதிரா சாபு கூறினார்.

மேலவையில் இன்று அரச உரை மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் துணையமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இல்லற வாழ்க்கைத் தொடர்பான விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக விரைவில் மணம் புரியவிருக்கும் முஸ்லீம் அல்லாத ஜோடிகளுக்கும் திருமணப் பயிற்சி நடத்தப்பட வேண்டும் என செனட்டர் அக்னான் ஏதோக் முன்னதாக மேலவையில் பரிந்துரைத்திருந்தார்.



## ஆலம் மேகாவில் கேக் தயாரிக்கும் பயிற்சி

**ஷா ஆலம்,** கம்போங் பாரு ஹைக்கோம் மற்றும் ஆலம் மேகா இந்திய சமூகத் தலைவர் எம்.கோபியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற கேக் செய்யும் பயிற்சியில் 30 பேர் கலந்து கொண்டனர். இங்குள்ள செக்சன் 28, ஆலம் மேகா, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய மண்டபத்தில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 வரை நடைபெற்ற இந்த பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்குச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு நடத்தப்பட்ட இந்த பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் கேக் செய்வதற்கான நுணுக்கங்களைத் தெளிவாக கற்றுக் கொண்டதோடு உபரி வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக இந்த தொழிலை பகுதி நேரமாக கொள்ள இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில ஆட்சி குழு உறுப்பினருமான வீ. கணபதிராவ் ஆதரவில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு இந்தியச் சமூகத் தலைவருக்கான மானியத்தில் இருந்து சுமார் 5,000 வெள்ளி செலவிடப்பட்டது என்று அவர் மேலும் சொன்னார். மாநில அரசின் மானியத்தில் நடத்தப்படும் இத்தகைய இலவசப் பயிற்சி திட்டங்களில் மேலும் அதிகமானோர் பங்கேற்று பயனடையுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

# இந்திய தொழில் முனைவோருக்கு உதவ இரு புதிய திட்டங்கள் - ஐ-சீட் அறிமுகம்

**ஷா ஆலம்,** இந்திய சமூகம் வர்த்தகத் துறையில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கில் மேலும் இரு புதிய வர்த்தக உதவித் திட்டங்களை ஐ-சீட் எனப்படும் சிலாங்கூர் இந்திய சமூக மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகா அறிமுகப்படுத்த இருக்கிறது.



“டாக்டர் கோக்கனட் போஸ்” மற்றும் “அக்குவாஃபோனிக்” எனும் அவ்விரு திட்டங்களும் பரீசார்த்த அடிப்படையில் விரைவில் தொடங்கப்படும் என்று ஐ-சீட் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் டிக்கம் லுட்ஸ் கூறினார். ‘டாக்டர் கோக்கனட் போஸ்” திட்டம் இளநீர் மற்றும் அது சார்ந்த உணவுப் பொருள்களின் விற்பனை மேம்பாட்டை மையமாக கொண்டுள்ள வேளையில் “அக்குவாஃபோனிக்” திட்டம் மீன் வளர்ப்பு மற்றும் விவசாயம் ஆகிய இரு துறைகளை ஒருங்கே உள்ளடக்கிய ஒரு திட்டமாக விளங்குகிறது என அவர் குறிப்பிட்டார்.

“டாக்டர் கோக்கனட் போஸ்” திட்டத்தில் பங்கு பெறுவோருக்கு இளநீர் மற்றும் அந்த உணவுப் பொருளில் இருந்து தயாரிக்கப்படும் பல்வேறு பான வகை-களை விற்பனை செய்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு முக்கிய நகரங்களில் ஊராட்சி மன்றத்தின் அனுமதியுடன் சிறிய அங்காடிக் கடைகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

இந்த வியாபாரத்தில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் கிட்டத்தட்ட 9,500 வெள்ளி வரை செலவிடப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். இளநீர் வியாபார திட்டத்தில் அறுவருக்கும் அக்குவாபோனிக் திட்டத்தில் 15 பேருக்கும் தொடக்கக் கட்டமாக வாய்ப்பு வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

# வணிகத்தை விரிவுபடுத்த ஹிஜ்ரா ஸ்கீம் ஐ-பிசினஸ் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்



**ஷா ஆலம்,** சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்த மூலதனத்தைப் பெற ஸ்கிம் ஐ-பிசினஸ் திட்டத்தில் **RM**50,000 வரை நிதியுதவி பெற விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்தத் திட்டத்திற்கு **mikrokredit.selangor.gov.my** மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது 19 ஹிஜ்ரா கிளைகளில் உள்ள நிதி அதிகாரியை தொடர்பு கொள்ளலாம் என்று யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் முகநூலில் தெரிவிக்கப்பட்டது.

“இந்த திட்டத்தின் மூலம் RM50,000 வரை வணிக மூலதனம் வழங்கப்படுகிறது. அதற்கான விண்ணப்ப தகுதி பின்வருவன மலேசியரகவும் சிலாங்கூரில் வசிப்பவர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் சிலாங்கூரில் வாக்குப்பதிவு கொண்டவராக இருக்க வேண்டும்.

அவர் வயது 18 முதல் 65 க்குள் இருத்தல் வேண்டும். வணிகம் ஏற்கனவே செயல்பட்டு கொண்டிருக்க வேண்டும் செல்லுபடியாகும் வணிக உரிமம் அல்லது அனுமதி வேண்டும்

ஹிஜ்ரா, **i-Agro, Zero to Hero, Niaga Darul Ehsan (NaDI), Go Digital, i-Lestari** மற்றும் **i-Bermusim** போன்ற நிதித் திட்டங்களையும் வழங்குகிறது. மாநிலம் முழுவதும் உள்ள **57,492** தொழில் முனைவோர் தங்கள் வணிகங்களை மேம்படுத்த 2015 இல் நிறுவப்பட்டதிலிருந்து பல்வேறு நிதித் திட்டங்களின் வழி RM749.63 மில்லியன் மதிப்பில் ஹிஜ்ரா வழங்கியுள்ளது.



# குடும்பம் வருமானத்தை அதிகரிக்க மகளிர் மேம்பாட்டு உணவு பட்டறை

**ஷா ஆலம்,** உணவுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமும் பெண்கள் குடும்ப வருமானத்தை ஈட்டவும், அதிகரிக்கவும் உதவும் வகையில் உணவு பதனிடும் பட்டறை ஒன்றை செந்தோசா தொகுதி ஏற்பாடு செய்துள்ளது.

அத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி குணராஜ் கூறுகையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை செந்தோசா தொகுதி சமூக மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறக்குறைய 30 பேர் கலந்து கொண்டனர்.

“இந்த திட்டத்தின் மூலம், பங்கேற்பாளர்களுக்கு உணவின் சுவையை குன்றாமல், அவை நீண்ட காலம் நீடிக்க அனுமதிக்கும் பாதுகாப்பு நுட்பங்களும் கற்பிக்கப்பட்டன.

“பங்கேற்பாளர்களுக்கு உதவ இந்த நுட்பம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மேலும், அனுபவமிக்க சமையல்காரர்கள் வகுப்பை நடத்தினர். இதனால் பங்கேற்பாளர்கள் வணிகத்தைத் தொடங்குவதற்கு முன் கூடுதல் திறன்கள் மற்றும் சரியான பாதுகாப்பு நுட்பங்களைப் பெற முடியும்,” என்று கூறினார்.

செந்தோசா தொகுதி மகளிர் மையம் (PWB) ஏற்பாடு செய்திருக்கும் இந்த இலவச நிகழ்ச்சியின் மூலம், பங்கேற்பாளர்கள் நெத்திலி சாஸ் மற்றும் ஊறுகாயை பாதுகாக்கும் நுட்பங்களைக் கற்றுக் கொள்ளலாம் என்று குணராஜ் கூறினார்.

இந்நிகழ்வு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதால், அவரது தரப்பு ஐடில்பித்ரிக்குப் பிறகு, அத் தொகுதியில் உள்ள அதிகமான பெண்கள் அதைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள உதவும் வகையில் இரண்டாவது தொடர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய உள்ளதாகவும் கூறினார்.

# உணவு மூலப் பொருள்களை நேரடியாக இறக்குமதி செய்ய அனுமதிப்பீர்



பெட்டாலிங் ஜெயா,உணவுப் பொருள் விலையைக் குறைப்பதற்கு ஏதுவாக உணவு மூலப்பொருள்களை நேரடியாக இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கும்படி இந்திய உணவகங்களைப் பிரதிநிதிக்கும் தரப்பினர் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். கோழி, முட்டை போன்ற உணவு மூலப் பொருள்களின் விலை உயர்வு கண்டுள்ள காரணத்தால் 5.00 வெள்ளி விலையில் உணவை விற்கும் மெனு ரஹ்மா திட்டத்தில் இணைந்துள்ள தங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பிரிமாஸ் எனப்படும் மலேசிய இந்திய உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜே.சுரேஷ் கூறினார்.

உணவு விலை அதிகமாக உள்ளதாக பொது மக்கள் குறை கூறுகின்றனர். இந்த விஷயத்தில் எங்களைக் (உணவக உரிமையாளர்கள்) குறை கூறி பயனில்லை என்று ஃபிரி மலேசியா டுடே இணைய ஏட்டுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, கட்டுபடி விலையிலான உணவு விற்பனைத் திட்டத்தில் பங்கேற்றுள்ள உணவகங்களுக்கு ஊக்குவிப்பை வழங்கும் வகையில் மானிய விலை சமையல் எண்ணெயை பயன்படுத்துவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும் என பிரெஸ்மா எனப்படும் மலேசிய முஸ்லீம் உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜவஹார் அலி தாய்ப் ஆலோசனை கூறினார்.

# சபாக் பெர்ணம் மேம்பாட்டுப் பணி சீராக நடைபெறுகிறது

**சபாங் பெர்ணம்**, சபாக் பெர்ணம் வட்டார மேம்பாட்டுத் திட்டம் (சாப்டா) சீரான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஒரு சில திட்டங்கள் அங்கீகாரத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சங்காட் மெந்திரியில் உள்ள சிலாங்கூர் விவேக வேளாண் பூங்காவில் (எஸ்.எஸ்.ஏ.பி.) மேற்கொள்ளப்படவிருக்கும் நவீன விவசாயத் திட்டமும் அதில் அடங்கும் என்று அடிப்படை மற்றும் பொது வசதிகள் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷம் கூறினார்.

சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு சுற்றுச் சூழல் துறையின் அங்கீகாரம் கிடைத்து விட்டது என்று அவர் தெரிவித்தார்.

இது தவிர, ஹெய் ரிசோர்ட் திட்டத்திற்கான விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் கிடைப்பது இறுதிக் கட்டத்தில் உள்ளது. சுங்கை லாங் விவசாய மற்றும் கடல்சார் உணவுப் பொருள் திட்டத்திற்கு திட்டமிடல் அனுமதி கோரி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தை நாம் எதிர்கொண் போதிலும் சாப்டா திட்டம் சீரான முறையில் மேம்பாடு கண்டு வருகிறது. அனைத்துத் திட்டங்களும் கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்படுகின்றன என்றார் அவர்.

இந்த திட்டங்களை அமலபடுத்துவதன் மூலம் இந்த வட்டாரத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க முடியும் என்பதோடு பொருளாதார வளர்ச்சியையும் துரிதப்படுத்த இயலும் என அவர் குறிப்பிட்டார்.




## மாநில அரசின் இலவசக் காப்புறுதித் திட்டத்தில்
### 10 லட்சம் மாணவர்கள் பதிவு

**ஷா ஆலம்,** சிலாங்கூர் மாநில அரசின் இலவசப் பொது காப்புறுதித் திட்டத்தில் (இன்சான்) மாநிலத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் சுமார் 10 லட்சம் மாணவர்கள் இயல்பாக பதிவு பெற்றுள்ளனர்.

தனியார் பள்ளிகள் உள்பட மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் முதலாம் ஆண்டு முதல் ஆறாம் படிவம் வரையிலான மாணவர்களுக்கான காப்புறுதி பிரீமியத் தொகையை மாநில அரசே ஏற்றுக் கொள்ளும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கல்வியமைச்சர் மற்றும் மாநில கல்வி இலாகாவுடன் மாநில அரசு நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக திட்டத்தை அமல்படுத்துவதற்குரிய சாத்தியம் ஏற்பட்டதாக அவர் சொன்னார்.

பள்ளி செல்லும் அனைத்து மாணவர்களுக்கும் மாநில அரசின் செலவில் காப்புறுதிப் பாதுகாப்பை வழங்க வகை செய்யும் மலேசியாவின் ஒரே திட்டமாக இந்த இன்சான் திட்டம் விளங்குகிறது என அவர் குறிப்பிட்டார்.

இந்த விபத்துக் குழு காப்புறுதி மாநிலத்தில் வசிக்கும் பிறந்து 30 நாள் ஆன குழந்தை முதல் 80 வயது முதியவர்கள் வரை அனைவருக்கும் பாதுகாப்பை வழங்குகிறது. இத்திட்டத்திற்கு உண்டாகும் செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது என அவர் தனது பேஸ்புக் பதிவில் தெரிவித்தார்.

விபத்தின் காரணமாக உயிரிழப்போரின் குடும்பத்தினர் மற்றும் நிரந்தர முடத்தன்மைக்கு ஆளாவோருக்கு இந்த இத்திட்டத்தின் வாயிலாக 10,000 வெள்ளி வரை இழப்பீடு வழங்கப்படும்.

## மேம்படுத்த வேண்டிய சாலைகளை
### அரசு அடையாளம் கண்டு வருகிறது

**சபாக் பெர்ணம்,** சிலாங்கூர் அரசாங்கம் உள்ளாட்சி நிர்வாகத்தின் கீழ் இருக்கும் மேம்படுத்தும் சூழலில் உள்ள சாலைகளை உள்ளூராட்சி மன்றங்கள் அடையாளம் கண்டு வருகிறது.

உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் எஸ்கோ ஐஆர் இஷாம் ஹசிம், ரி.ம 50 மில்லியன் ஒதுக்கீட்டில் இந்த மாதம் முதல் பெரிய அளவில் சாலைகளை மேம்படுத்தும் பணி உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றார்.

"நாங்கள் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளோம், நடைபாதை வேலைகளில் பயன்படுத்த வேண்டிய முறைகள் கூட தயார் நிலையில் உள்ளன. இனி செயல்படுத்துவது மட்டுமே எஞ்சியுள்ளது.

"இப்போது இறுதிச் செயல்முறையாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சாலைகளை கண்டறிந்து வருகிறோம். கூடிய விரைவில் கூட்டத்தை நடத்துவது," என்றார்.

ஜனவரி 16 ஆம் நாள் அன்று, டத்தோ மந்திரி புசார், மாநில நிர்வாகத்தின் கீழ் உள்ள சாலைகள் பராமரிப்பு மற்றும் விரிவாக்கத்தை உள்ளடக்கிய ஒரு மெகா சாலை மேம்பாட்டு திட்டத்தை அறிவித்தார்.

மந்திரி புசார் அவர்கள், பொதுமக்கள் தங்கள் இடங்களில் உள்ள சாலைகள் சேதம் ஏற்பட்டால் ட்விட்டர் செயலி மூலம் அவற்றின் புகைப்படங்களை அனுப்பி, புகார் அளிக்கலாம் என்று பொதுமக்களை ஊக்குவித்தார்.

இதற்கிடையில், இரண்டாம் கட்ட எல்.இ.டி தெரு விளக்குகள் நிறுவும் பணியும் இந்த மாதம் மேற்கொள்ளப்படும் என்று ஐஆர் இஷாம் கூறினார்.

## 65.6 மில்லியனில்
### ஆறு பொது சுகாதார முயற்சிகள்

ஷா ஆலம், மனநல சுகாதாரம் "கேசிஹத்தன் மென்டல்" மற்றும் முதியோர் நலம் "பெனுவான் சிஹாட்" ஆகியவை இந்த ஆண்டு சிலாங்கூர் பொது சுகாதார முன்முயற்சியின் ஆறு அம்சங்களில் ஒன்றாகும் என்று பொது சுகாதார EXCO தெரிவித்துள்ளது.

மனநல சுகாதாரம் "கேசிஹத்தன் மென்டல்" மற்றும் முதியோர் நலம் "பெனுவான் சிஹாட்" ஹிடுப் ராக்யாட் முக்கிய முயற்சிக்காக RM65.6 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்று டாக்டர் சித்தி மரியா மஹ்மூத் கூறினார்.

"மேலும், தொற்றா நோய்கள் இருதய நோய், சிறுநீரகம், இனிப்பு நீர், இரத்த அழுத்தம் மற்றும் காச நோய் ,டிங்கியை தவிர்த்து புற்றுநோய் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைவு" போன்றவற்றிலும் மாநிலம் கவனம் செலுத்துவதாக உலக சுகாதார தினத்தை ஒட்டிய அவரின் பேஸ்புக்கில் அறிக்கையில் கூறினார். "சிலாங்கூர் மக்கள் எந்தப் பின்னணியில் இருந்தாலும் நல்ல சுகாதார சேவையை அணுக முடியும் என்பதை உறுதி செய்வதாக" அவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சுகாதார தினம் குறித்து, இது மனித வாழ்க்கையை பாதிக்கும் சுகாதார பிரச்சினைகள் குறித்து உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமாகும்.

"உலக சுகாதார தினம், சுகாதார அதிகாரிகளால் செயல்படுத்தப்பட்ட பொது சுகாதாரத் திட்டங்களை பற்றி உள்ளூர் சமூகம் அறிந்து கொள்வதற்கான இடத்தையும் வழங்குகிறது," என்று அவர் கூறினார்.



# இலவசக் குடிநீர்த் திட்டம்

**சபாக் பெர்ணம்,** இருபது கனமீட்டர் நீரை இலவசமாகப் பெறுவதற்கான குறைந்த பட்ச குடும்ப வருமான வரம்பை 6,000 வெள்ளியாக உயர்த்துவதற்கான சாத்தியத்தை சிலாங்கூர் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்த டாருள் ஏசான் இலவச குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக மாநிலத்திலுள்ள ஆறு லட்சம் குடும்பங்கள் பயனடைவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அடிப்படை வசதிகள் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இந்த திட்டத்திற்கு இதுவரை குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளன. சிலாங்கூர் மாநிலத்தின் வறுமைக் கோட்டு அளவு 6,000 வெள்ளியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இத்திட்ட விண்ணப்பதாரர்களின் வருமான வரம்பையும் உயர்த்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தில் குறைவான எண்ணிக்கை-யிலானோர் பதிவு செய்வதற்கு இதுவே காரணமாக இருந்தால், அது குறித்து பரிசீலனை செய்து குறைந்தபட்ச வருமான வரம்பை உயர்த்துவதற்கு பரிந்துரை செய்வோம் என்றார் அவர். இங்குள்ள பாகான் தெராப்பில் நேற்று நடைபெற்ற சபாக் பெர்ணம் மாவட்ட நிலையிலான ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த திட்டத்தை மக்களிடம் அறிமுகப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொதுமக்களிடமிருந்து அதற்கு குறை-வான ஆதரவே கிடைத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பெறக்கூடிய 11.00 வெள்ளி கழிவுத் தொகை என்பது சிறியதாக அவர்களுக்கு தோன்றலாம் அல்லது அந்த சலுகையை பிறர் பெறட்டும் என்ற பெருந்தன்மை காரணமாக இருக்கலாம் என்றார்.




# மழலையர் பள்ளி பராமரிப்பு

## ஊக்கத்தொகை வழங்கப்படும்

ஷா ஆலம், ஐந்து மற்றும் ஆறு வயதுடைய மொத்தம் 3,355 குழந்தைகள், மழலையர் பள்ளி பராமரிப்பு ஊக்கத்தொகை மாதம் 100 ரிங்கிட்டைப் பெற வாய்ப்புள்ளதாக யாயாசன் வாரிசான் அனாக் சிலாங்கூர் அறிவித்துள்ளது.

உதவி நிறுவன மேலாளர் ஷரிசான் முகமட் ஷெரீப் கூறுகையில், சிலாங்கூர் மழலையர் பள்ளி உதவித் திட்டத்திற்கான (துனாஸ்) பதிவு, உதவி பெறும் குடும்பங்கள் உண்மையிலேயே தகுதியுடையதா என்பதை உறுதிப்படுத்த இன்னும் திறந்தே உள்ளது.

"ஒரு குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இந்த உதவி வழங்கப்படும். இந்த RM100 ஊக்கத்தொகை நேரடியாக மழலையர் பள்ளி உரிமையாளருக்கு வழங்கப்படும்" என்று சிலாங்கூர்கினியிடம் தெரிவிக்கப்பட்டது.

மாநிலத்தில் பிறந்து வாழும் குழந்தைகளைத் தவிர RM5,000க்கும் குறைவான குடும்ப வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்படுவதாக ஷரிசான் கூறினார்.

இந்த உதவியைப் பெற http://tunas.yawas.my/ என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். ஏதேனும் கேள்விகள் இருந்தால் 03-5481 8800 என்ற எண்ணுக்கு அழைக்கலாம் அல்லது யாவாஸ் முகநூல், இன்ஸ்டாகிரம் போன்ற சமூகப் பக்கங்கள் மற்றும் யாவாஸ் டிவியின் "யூ டியுப்பை" பார்வையிடலாம்.

# அடுக்குமாடி குடியிருப்புகளில்

## 6 லட்சம் எல்.இ.டி. விளக்குகள்

சிப்பாங், வரும் 2025ஆம் ஆண்டிற்குள் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஆறு லட்சம் எல்.இ.டி. விளக்குகளைப் பொருத்தும் இலக்கை அடைய மாநில அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் ஒரு கோடி மரங்கள் வெட்டப்படுவதிலிருந்து தடுக்க முடியும் என்பதோடு கார்பன் வெளியேற்றத்தையும் குறைக்க முடியும் என்று வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.



எதிர்காலத் தலைமுறையினர் நம்மைப் போலவே அதாவது நாகரீக சூழலிலும் சுற்றுச் சூழலுக்கு பங்கம் வராத வகையிலும் வாழ்க்கையைத் தொடர்வதை உறுதி செய்யும் நோக்கிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அதே சமயம், நாம் நீடித்த மேம்பாட்டு இலக்கை (எஸ்.டி.ஜி.எஸ்) அடையவும் கார்பன் வெளியேற்றத்தைத் தடுத்து பூமியைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக மரங்கள் வெட்டப்படுவதை தடுத்து சுபிட்சமான வாழ்வு வாழவும் இயலும் என்றார் அவர்.

பூச்சோங், தாமான் புத்ரா பெர்டானாவிலுள்ள சொராஜா அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் பசுமைத் தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் எல்.இ.டி. விளக்குத் திட்டத்தைத் தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சீரான நடவடிக்கைத் திட்டத்தோடு கூட்டு நிர்வாக மன்றம் மற்றும் எம்.சி. எனப்படும் மேலாண்மைக் கழகம் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்போடு இந்த திட்டத்தை வெற்றிகரமாக அமல்படுத்த முடியும் எனத் தாங்கள் நம்புவதாகவும் அவர் கூறினார்.

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பின் வாயிலாக இந்த திட்டம் திட்டமிடப்பட்டதைக் காட்டிலும் முன்கூட்டியே இலக்கை அடைய முடியும் என்றும் அவர் சொன்னார்.

# சுங்கை பத்தாங் காலி பாலத்தை அகலப்படுத்தும் திட்டம்

ஷா ஆலம், உலு சிலாங்கூர், சுங்கை பத்தாங் காலி பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் செப்டம்பர் 6ஆம் தேதி நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் (ADN) கோலா குபு பாரு லீ கீ ஹியோங் கூறுகையில், திட்டத்தின் வேலை அட்டவணையில் 81 சதவீதத்தை எட்டியுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி 32 மில்லியன் ரிங்கிட் செலவில் தொடங்கப்பட்ட இந்த திட்டம் ஐந்து பாதைகளைக் கொண்டிருக்கும். குறிப்பாக இத்திட்டம் ராசா முதல் பத்தாங் காலி வரையிலான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காணும் என எதிர்பார்க்கப்படுகிறது என முகநூலில் அவர் தெரிவித்துள்ளார். 16 மே 2019 அன்று, மாநில அரசு உலு சிலாங்கூர் மாவட்டத்திற்கு RM69.2 மில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளது.





## சிலாங்கூர் அரசின் வான் கண்காட்சி செப்டம்பரில் நடைபெறும்

**ஷா ஆலம்,** மூன்றாவது சிலாங்கூர் வான் கண்காட்சி வரும் செப்டம்பர் 7 முதல் 9 வரை நடைபெறும். இந்தக் கண்காட்சியின் வழி 200 கோடி வெள்ளி வரையிலான முதலீட்டு வாய்ப்புகளை கவர திட்டமிடப்பட்டுள்ளது. சுபாங், ஸ்கைபார்க் வட்டார வான் போக்குவரத்து மையத்தில் (ஸ்கைபார்க் ஆர்.ஏ.சி.) நடைபெறவிருக்கும் இந்த கண்காட்சியில் 12,000 வருகையாளர்களையும் வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த 50 கண்காட்சியாளர்களையும் ஈர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

வான் போக்குவரத்து துறை சார்ந்தவர்களைச் சந்திப்பதன் மூலம் அத்துறையை முக்கியத் தளமாக நாட்டில் விரிவுபடுத்துவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

நாட்டின் வான் போக்குவரத்து சார்ந்த 67 விழுக்காட்டுத் துறைகள் சிலாங்கூரை இருப்பிடமாக கொண்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். இந்த கண்காட்சியின் போது விமானக் கண்காட்சி, வர்த்தக வலையமைப்பு, டிரோன், ஆய்வரங்கு ஆகியவற்றோடு ஹெலிகாப்டரில் சொகுசு பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் என அவர் சொன்னார்.

இது தவிர, டிரோன் சாதனத்தைக் கையாள்வது, விமானப் பணிப்பெண் உள்ளிட்ட வேலை வாய்ப்புகள் தொடர்பான கல்வித் திட்டங்களுக்கும் இந்த கண்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இன்று இங்கு நடைபெற்ற எஸ்.ஏ.எஸ். 2023 வான் கண்காட்சி தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்முறை இந்த கண்காட்சியில் அதிகமான வான் போக்குவரத்துத் துறையினர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படும் வேளையில் பல்வேறு ரகங்களைச் சேர்ந்த 40 விமானங்களும் காட்சிக்கு வைக்கப்படும் என அவர் கூறினார்.

## 6,000 கோடி வெள்ளிக்கும் அதிகமான முதலீட்டை சிலாங்கூர் பதிவு

**பெட்டாலிங் ஜெயா,** சிலாங்கூர் அரசு கடந்தாண்டு முழுவதும் பல்வேறு துறைகளில் 6,000 கோடி வெள்ளிக்கும் அதிகமான முதலீட்டைப் பதிவு செய்தது.

கடந்தாண்டு நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட மொத்த முதலீட்டில் 22.7 விழுக்காட்டை இது பிரதிபலிக்கிறது என்று முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாம் கிம் கூறினார்.

இந்த முதலீடு பல்வேறு துறைகளைக் குறிப்பாக உற்பத்தித் துறையை உள்ளடக்கியுள்ளது. கடந்தாண்டு முழுவதும் 1,220 கோடி வெள்ளி மதிப்பிலான 265 முதலீடுகளை மாநில அரசு ஈர்த்தது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து மேலும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் சிலாங்கூர் தீவிரம் காட்டி வருகிறது. கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவலுக்குப் பின்னர் நாடுகளின் எல்லைகள் திறக்கப்பட்டு விட்டதால் இந்த முயற்சி சாத்தியமடைய வாய்ப்புகள் உள்ளன என்று அவர் சொன்னார்.

கடந்தாண்டு தொழில்துறை சார்ந்த 200 திட்டங்களை ஈர்த்த தன் வாயிலாக அந்நிய முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்குரிய முதலீட்டு மையமாக சிலாங்கூர் விளங்குவது நிரூபணமாகியுள்ளது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த வாரம் கூறியிருந்தார்.



## 3.8 மில்லியன் வேலை வாய்ப்புகள்

**பெட்டாலிங் ஜெயா**, சிலாங்கூர் முதல் 1 (ரஞ்சாங்கன் சிலாங்கூர் பெர்தாமாவில் ஆர். எஸ்-1) சேர்க்கப்பட்டுள்ள 14 இலக்குகளில் ஒவ்வொரு ஆண்டும் மொத்த ஏழு சதவிகிதம் உள்நாட்டு உற்பத்தியின் (கே.டி.என்.கே) அதிகரிக்க உள்ளது.

EXCO மாநில முதலீட்டு வளர்ச்சித் திட்டத்தில் 200 க்கும் மேற்பட்ட திட்டங்கள் உள்ளன, இது வெ. 25 முதல் வெ. 35 பில்லியன் வரையிலான உயர் முதலீட்டு மதிப்பை இலக்காகக் கொண்டது.

டத்தோ தெங் சாங் கிம் கருத்துப்படி, ஐந்தாண்டு காலத்திற்கான கட்டமைப்பானது 3.5 மில்லியன் முதல் 3.8 மில்லியன் வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்டிருப்பதோடு கூடுதலாக வணிக வாய்ப்பு-களையும் அதிகரிக்கும். "இந்த செயல் திட்டம் 2025க்குள் சிலாங்கூரை ஒரு வளமான மாநிலமாக மாற்றும் என்று நான் நம்புகிறேன்," என்று இன்று சிலாங்கூர் சர்வதேச பொருளாதார உச்சி மாநாட்டின் துவக்கத்தில் கூறினார். 2021 இல் தொடங்கிய திட்டங்களில் தெற்கு சிலாங்கூர் ஒருங்கிணைந்த வளர்ச்சி பகுதி, சபாக் பெர்ணம் பகுதியின் மேம்பாடு மற்றும் சிலாங்கூர் கடல்சார் நுழைவாயில் உள்ளிட்ட பல மெகா திட்டங்கள் அடங்கும்.



## வெ.150 கோடி விற்பனை வாய்ப்புகள்

பெட்டாலிங் ஜெயா, வரும் அக்டோபர் மாதம் 19 முதல் 22 வரை நடைபெறவிருக்கும் சிப்ஸ் எனப்படும் 2023ஆம் ஆண்டிற்கான சிலாங்கூர் அனைத்துலக வர்த்தக மாநாட்டின் வழி 150 வெள்ளி மதிப்புள்ள விற்பனை வாய்ப்புகளை பதிவு செய்ய மாநில அரசு திட்டமிட்டுள்ளது. கோலாலம்பூர் அனைத்துலக மாநாட்டு மையத்தில் நடைபெறும் இந்த நான்கு நாள் மாநாட்டில் இடம் பெறும் ஆறு பிரதான நிகழ்வுகளின் வாயிலாக இந்த விற்பனை வாய்ப்புகளைப் பெற முடியும் என கணிக்கப்பட்டுள்ளதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார். சிலாங்கூர் விவேக நகர மற்றும் இலக்கவியல் பொருளாதார கண்காட்சியும் விற்பனையில் முக்கிய பங்களிப்பை வழங்கின. அதன் அடிப்படையில இவ்வாண்டும் அதே வாய்ப்புகளை பெற முடியும் என நம்புகிறோம் என்று அவர் தெங் மேலும் சொன்னார். ஆசியாவின் மிகப்பெரிய வர்த்தக உச்சநிலை மாநாடாக விளங்கும் இதில் இம்முறை சுமார் 70 நாடுகளிலிருந்து 50,000 வர்த்தகம் சார்ந்த வருகையாளர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மாநில அரசின் மலிவு விற்பனை மே மாதம் முடிவுக்கு வருகிறது



**சபாக் பெரணம்,** அதிகரித்து வரும் பொருள் விலை சவால்களை எதிர்கொள்வதற்கு ஏதுவாக மக்களுக்கு உதவக்கூடிய புதிய வழிமுறையை மாநில அரசு ஆராயும்.

வரும் மே மாதத்துடன் முடிவுக்கு வரவிருக்கும் சிலாங்கூர் விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் (பி.கே.பி.எஸ்.) ஏற்பாட்டிலான ஏசான் ராக்யாட் மலிவு விற்பனைத் திட்டத்திற்கு மாற்றத் திட்டத்தை அறிமுகப்படுத்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நவீன விவசாயம் மற்றும் அடிப்படை உணவு தொழில் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இந்த மலிவு விலைத் திட்டத்தை தொடர முடியாது. ஆனால் சில சூழ்நிலைகளில் மானியங்கள் வழங்கப்பட வேண்டும். இல்லை-யெனில் பொது மக்களுக்குச் சிரமம் ஏற்படும் என்று அவர் சொன்னார். குறுகிய காலத்திற்கு மட்டுமே நாம் மானி-யங்களை வழங்க முடியும். எனினும், கோழி விலையைக் குறைப்பது போன்ற நீண்டகால அடிப்படையிலான திட்டம் தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

கோழியின் விலையும் குறைக்க வேண்டு-மானால் கோழி தீவனத்தின் விலையை குறைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று அமைச்சரிடம் (விவசாயத்துறை) நான் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளேன் என்று இஷாம் ஹாஷிம் கூறினார்.

மெனு ரஹ்மா மலிவு விலை உணவு விநியோகம் போன்ற திட்டத்தை அமல் படுத்து-வதற்குச் கூட்டரசு சந்தை வாரியம் (ஃபாமா) மற்றும் வர்கா ஹிஜ்ரா சிலாங்கூர் பெர்ஹாட் (கோஹிஜ்ரா) கூட்டுறவுச் சங்கம் ஆகிய தரப்பினருடன் ஒத்துழைக்க தமது தரப்பு உத்தேசித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நாட்டின் தென்னை விதை உற்பத்தியில் சிலாங்கூர் முன்னிலை வகிக்கும்




**சபாக் பெர்ணம்,** 'விதை வளர்ப்பவர்கள்' திட்டத்தின் மூலம் நாட்டில் தென்னை மர விதைகளை உற்பத்தி செய்வதில் சிலாங்கூர் முன்னணியில் இருக்கும். மாநில வேளாண்மைத் துறையின் துணை இயக்குநர், இங்குள்ள சுங்கை ஆயர் தாவாரில் நான்கு தொழில் முனைவோரை உள்ளடக்கிய இதனை இந்த ஆண்டு தொடக்கத் திட்டம் கொண்டுள்ளதாக கூறினார்.

வான் முகமட் துல்கர்னைன் பஹாருடின் கருத்துப்படி, நாடு எதிர்நோக்கும் தேங்காய் விநியோக பிரச்சனைக்கு இந்த முயற்சி நீண்டகால தீர்வாகும். "மலேசியாவில் தேங்காய் உற்பத்தி செய்யும் இரண்டாவது பெரிய மாவட்டம் சபாக் பெர்ணம். எனவே, 50 ஏக்கர் பரப்பளவில் இந்த இடத்தை தேர்வு செய்துள்ளோம். இந்தத் திட்டத்தின் மூலம் சபாக் பெர்ணம் நாடு முழுவதற்குமான தரமான தேங்காய் விதைகளை உற்பத்தி செய்யும் மையமாகவும் மாறும் என நம்புகிறேன் என்றார் அவர். நேற்று ஜெலாஜா கித்தா சிலாங்கூர் பென்யாயாங் சபாக் பெர்ணம் மாவட்ட நிகழ்ச்சியில் அவர் சந்தித்தார். மேலும் விவசாய அடிப்படைத் தொழில் ஆட்சிக்குழு உறுப்பினர் ஐ.ஆர் இஸாம் ஹஷிம் கலந்து கொண்டார். வான் முகமது சுல்கர்னைன் மேலும் கூறுகையில், இந்தத் திட்டமானது 'தேக்னானன்' மற்றும் 'மலேயன் யேல்லோ டல்வ்' வகையிலான தென்னை மரங்களில் இருந்து இரண்டு வகை கலவையான 'ஹைப்ரிட் மாடாக்' விதைகளை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய விதைகள் ஒரு மரத்திற்கு ரி.ம 50 முதல் ரி.ம 70 வரையிலான அதிக விற்பனை மதிப்பைக் கொண்டிருப்பதைத் தவிர சிறந்த தேங்காய் வகைகளில் ஒன்றாகும் என்று அவர் விளக்கினார்.

## ஐந்து ஆலயங்களுக்கு தனது சம்பளப் பணத்தை பகிர்ந்தளித்தார்

**சுங்கை பூலோ,** புதிதாக பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன், தொகுதியிலுள்ள 5 இந்துக் கோயில்களுக்கு தமது நாடாளுமன்ற உறுப்பினர் சம்பளத்தை பகிர்ந்தளித்தார்.

நேற்று காலை இங்கு ஆர்.ஆர்.ஐ.எம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற புத்தாண்டு சிறப்பு பூசையில் கலந்து கொண்ட அவர், ஆலயத் தலைவர் இராஜேந்திரனிடம் ஐயாயிரம் வெள்ளிக்கான காசோலையை வழங்கினார்.



தொடர்ந்து, கம்போங் பாரு சுங்கை பூலோவிலுள்ள ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயத்திற்கு ஐயாயிரம் வெள்ளி, கம்போங் ஸ்ரீ பூங்காவிலுள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்திற்கு இரண்டாயிரம் வெள்ளி, ஜாலான் கம்போங் பாடாங் தேம்பாக்கிலுள்ள ஸ்ரீ சிவ சக்தி ஆலயத்திற்கு இரண்டாயிரம் வெள்ளி, தாமான் செகாரிலுள்ள ஓம் ஸ்ரீ ஜெய் மதுரை வீரன் மஹா காளியம்மன் சக்தி ஆலயத்திற்கு இரண்டாயிரம் வெள்ளி என மொத்தம் 5 இந்துக் கோயில்களுக்கு தமது சம்பளப் பணத்தை வழங்கி, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினார் டத்தோ ரமணன்.

## கிள்ளான் நகராண்மைக் கழக உறுப்பினர் கண்மணி லட்சுமணன்



சிலாங்கூர் இந்தியச் சமூகச் செயலாளராகவும், மூன்று வருடம் ஐ-சீட் அதிகாரியாகவும் சேவையை தொடங்கி தற்போது N46D பெலாபோஹான் கிள்ளான் நகராட்சியில் ஒரு கவுன்சிலராகப் பதவி ஏற்றுள்ளார் கண்மணி லட்சுமணன். தனது தந்தையைப் பின் பற்றி நிறைய பொதுச் சேவைகளிலும், அமைப்புகளிலும் ஈடுபட்டுச் சேவையாற்றி உள்ள அவர் தாமான் செந்தோசா வின் ஐ செ.க தலைவராகவும் கோத்தா ராஜா ஐ.செ.க மகளிர் தலைவியாகவும் உள்ளார். அவர் வசிப்பது கம்போங் ஜாவாவில், கிள்ளான் நகராண்மைக் கழக பணி வட்டாரமாக பிளக் வாட்டர், கோத்தா பாயுமாஸ், கென்னாரி கார்டென், பண்டார் பாக்லன், லமான் கிரீன் வெளி, பண்டார் பெஸ்தாரி ஆகிய பகுதிகள் தனக்கு வழங்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார். இது ஒரு சவால் மிக்க பணி என்பதாலும் அங்கு குடியிருப்போரின் எதிர்பார்ப்புகள் அதிகமாக இருப்பதால் இப்போது தனது பணி வட்டாரத் தேவைகள், மக்களின் சேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறுகிறார். இந்திய மகளிருக்கான கல்வி மற்றும் மேம்பாடுகளுக்கு சில செயல் திட்டங்களை கொண்டுள்ளதாகவும் அதனை விரைவில் செயல்படுத்த எண்ணம் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# இனிய
# சித்திரை, யுகாதி
# வைசாகி,விஷு
# புத்தாண்டு வாழ்த்துகள்



# நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள்








Hari Raya Aidilfitri

## புயல் காற்றில் பாதிக்கப்பட்ட, பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளி



**கிள்ளான்,** கிள்ளான் மற்றும் ஷா ஆலம் வட்டாரத்தில் நேற்று மாலை பெய்த பலத்தக் காற்றுடன் கூடிய கனத்த மழையில் இங்குள்ள பத்து அம்பாட் பள்ளி சேதமடைந்தது.

மாலை மணி 4.30 அளவில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் அந்த பள்ளியின் கூரைகள் மற்றும் உட்கூரைகள் உடைந்ததோடு மரம் விழுந்து பள்ளியின் வேலி மற்றும் கட்டிடத்திற்கும் சேதத்தை ஏற்படுத்தியது.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து நேற்று மாலை பள்ளிக்கு விரைந்த செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் ஜி.குணராஜ், பள்ளியில் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டதோடு அவற்றை சரி செய்வதில் கல்வி இலாகா மற்றும் மாநில அரசின் ஒத்துழைப்பு தாம் நாடவிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த இயற்கைப் பேரிடர் காரணமாக ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான தரவுகளைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கமும் பள்ளி வாரியமும் தயார் செய்தப் பின்னர் சம்பந்தப்பட்டத் தரப்பினரின் கவனத்திற்கு இவ்விவகாரம் கொண்டுச் செல்லப்படும் என்றார் அவர்.

தகவல் அறிந்து பள்ளிக்கு விரைந்த பள்ளி வாரியம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொறுப்பாளர்கள் பள்ளி வளாகத்தில் சிதறிக் கிடந்த உடைத்த ஓடுகளை அப்புறப்படுத்தியதோடு வகுப்பறைகளில் தேங்கியிருந்த நீரையும் சுத்தம் செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பாதிப்புகளைச் சரி செய்வதற்கு 30,000 வெள்ளி வரை செலவு பிடிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று அவர் சொன்னார்.

## 6,000 சிலாங்கூர் கூ இடாமான் வீடுகள் - 2 ஆண்டில் பூர்த்தி



**ஷா ஆலம்**, சிலாங்கூரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் 6,000 சிலாங்கூர் கூ இடாமான் வகை வீடுகள் வரும் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுவாக்கில் முற்றுப் பெறும்.

புக்கிட் ஜெலுத்தோங் (ஷா ஆலம்), பண்டார் சௌஜானா புத்ரா (கோல லங்காட்), சைபர் சவுத் (டிங்கில்), புஞ்சா ஆலம் (கோல சிலாங்கூர்), தாமான் ஆயர் மானிஸ் (சபாக் பெர்ணம்) ஆகிய இடங்களில் இந்த கட்டுபடி விலை வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக பெர்மோடலான் நேஷனல் பெர்ஹாட் (பி.என்.எ.ஸ்.பி.) தலைமைச் செயல்முறை அதிகாரி ராஜா அகமது ஷாரிர் இஸ்கந்தர் ராஜா சலிம் கூறினார்.

கட்டுப்படி விலை வீடுகளை நிர்மாணிப்பதில் பி.என்.எஸ்.பி. ஒரு உந்து சக்தியாக விளங்கி வருகிறது. செமினி ட்ரோப்பிகானா ஹைட்ஸ் பகுதியில் 2,500 வீடுகளை உள்ளடக்கிய திட்டத்தை நாங்கள் அமல்படுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

ஆறாயிரம் வீடுகளை உள்ளடக்கிய மேலும் சில திட்டங்கள் வெகு விரைவில் பூர்த்தியாகவுள்ளன என்று பி.என்.எஸ்.பி. ஏற்பாட்டில் நேற்று இங்கு நடைபெற்ற நோன்பு பெருநாள் பொது உபசரிப்பு நிகழ்வில் உரையாற்றிய போது அவர் குறிப்பிட்டார்.

விண்ணப்பங்களை நன்கு ஆராய்ந்து தகுதி உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்கிறோம். இது முதல் வீடாகவும் விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் மாதம் 10,000 வெள்ளிக்கும் குறைவாகவும் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும் என்றார் அவர்.



## 39,182 மோசமான சாலைகளை இன்ஃப்ராசெல் சரி செய்தது

**ஷா ஆலம்,** சிலாங்கூர் முழுவதும் மொத்தம் 39,182 மோசமான சாலைகள் 2021 முதல் கடந்த ஆண்டு வரை மாநிலச் சாலை பராமரிப்பு நிறுவனமான இன்ஃப்ராசெல் மூலம் சரி செய்யப்பட்டன.

கும்புலன் செமஸ்டர் எஸ்டினன் பிஎச்டி (கேஎஸ்எஸ்பி) கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் துறைத் தலைவர் சுஹைமி காலிடி கூறுகையில், பொதுமக்கள் புகார் அளித்து 24 மணி நேரத்திற்குள் அச்சாலைகள் சரி செய்யப்பட்டுள்ளது.

"சாலை பழுதுபார்ப்பு மட்டுமின்றி, இன்ஃப்ராசெல் நிறுவனம் மின்சாரப் பணிகள், சாலை கட்டுமானம், நிலச்சரிவு, வெள்ளம் மற்றும் கண்காணிப்பு சேவைகள் போன்ற அவசர பணிகளையும் மேற்கொள்கிறது," என்று அவர் கூறினார்.

இன்ஃப்ராசெலின் மேற்பார்வையின் கீழ் உள்ள பகுதியில் வாகனம் ஓட்டுவதற்கு இடையூறாக சாலைகளில் மரங்கள் இருப்பது குறித்தும் தனது தரப்புக்குப் புகார்கள் வந்ததாக அவர் மேலும் கூறினார்.

கோம்பாக், சிப்பாங், பெட்டாலிங், கோலா சிலாங்கூர், சபாக் பெர்ணாம், உலு லங்காட், கோலா லங்காட் மற்றும் உலு சிலாங்கூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இன்ஃப்ராசெல் சாலைகளை சரி செய்துள்ளது.

முன்னதாக, டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, மக்கள் தங்கள் இடங்களில் உள்ள பழுதடைந்த சாலைகளை பற்றி ட்விட்டரில் பதிவு செய்ய மக்களை ஊக்குவித்தார்.

## சுங்கை பூலோ நீர் வடிகால் பழுது பார்க்கும் பணி



**ஷா ஆலம்,** இன்ஃப்ராசெல் இங்குள்ள ஜாலான் பெர்சிம்பங்கன் ஜாலான் வெல்ஃபேர் மற்றும் இண்டஸ்ட்ரி 9, சுங்கை பூலோவில் நீர் வடிகால் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொண்டது.

கடந்த செவ்வாய்கிழமை @infrasel_kjp என்ற ட்விட்டர் பக்கத்தில் புகார் வந்ததையடுத்து, மாநிலச் சாலை பராமரிப்பு நிறுவனம் பெட்டாலிங் மாவட்டத்தில் பழுதுபார்க்கும் பணியை மேற்கொண்டது. ஜனவரி 16 அன்று, டத்தோ மந்திரி புசார் அரசு நிர்வாகத்தின் கீழ் சாலைகளைப் பராமரித்தல் மற்றும் விரிவுபடுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய சாலை மேம்பாடு திட்டங்களுக்கு RM50 மில்லியன் ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார். டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, ட்விட்டர் மூலம் தங்கள் இடங்களில் சேதமுற்ற சாலைகள் குறித்து புகார் அளிக்க மக்களை ஊக்குவித்துள்ளார்.

முன்னதாக, உள்கட்டமைப்பு எஸ்கோ இஷாம் அசிம், பயனர்களின் வசதிக்காக இந்த மார்ச் மாதம் முதல் மாநிலம் முழுவதும் பெரிய அளவிலான சாலைகளை மேம்படுத்தும் பணி செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.





# கல்வியறிவற்ற பரமஏழைகளுக்குக் கை கொடுக்க வாரீர் !

**பெட்டாலிங் ஜெயா**

நாடாளுமன்றத் தொகுதியின் கீழ் உள்ள ஒரு சட்டமன்றத் தொகுதியான ஸ்ரீ செத்தியாவில் இந்தியச் சமூக தலைவராக செயல்படும் திரு. P. முத்து அத்தொகுதியில் உள்ள இந்தியர்களின் பிரச்சனைகள் குறித்து விவரிக்கையில், நாடு முன்னேறி இருக்கலாம் ஆனால் நம் சமுதாயம் இன்னும் 50 ஆண்டுகள் பின்தங்கி உள்ளதாக கூறுகிறார்.

அப்படி என்ன அத்தொகுதியில் இந்தியர்களுக்குப் பிரச்சனைகள் என்ற நமது கேள்விக்கு? கல்வி அறிவு இல்லாத மக்கள், அதனால் அடையாளப் பத்திரங்கள் இல்லாதவர்கள், வேலை இல்லாதவர்கள், இன்னும் பள்ளிகளை விட்டு விலகும் பிள்ளைகள், தனித்து வாழும் தாய்மார்கள், இந்தக் காரணங்களால் குற்றச்செயல்களில் எளிதில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைகளில் இருக்கிறார்கள்.

நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு இந்தியக் கிராமத் தலைவராக இருக்கிறேன், நம்மவர்களின் பிரச்சனைகளுக்கு , நான் தனியாக தீர்வு காண முடியாது என்பதால் நான் கட்சி மட்டுமின்றி வெளியில் நண்பர்களிடமும் உதவியைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார்.

சில விவகாரங்களில் தனித்திறமையும் ஆற்றலுங்கொண்ட பிரிவினரின் உதவி தேவைப்படுகிறது. இங்குள்ள அடையாள ஆவணப் பிரச்சனை சிலாங்கூர் அரசின் உதவியுடன் மை செல் உதவி வருகிறது, இது போன்ற பிரச்சனைகளுக்கு தொடர்ச்சியான முயற்சி வேண்டும், நாம் ஒன்றுபட்டு முயன்றால் தீர்வுண்டு என்கிறார்.

இங்கு காணப்படும் கடுமையான விவகாரமாக ஆரம்பக் கல்வியை கூடத் தொடர முடியாமல் பள்ளியை விட்டு விலகும் பிள்ளைகள், அதற்கு ஏழ்மை முதல் காரணம், பள்ளி பேருந்து கட்டணத்தை செலுத்த முடியாத நிலை, மாநில அரசு பேருந்து கட்டண உதவியை மாநிலத்தில் உள்ள எல்லாத் தமிழ்ப் பள்ளிகளுக்கும் வழங்கியும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது கவனிக்க வேண்டிய விவகாரம்.

வேலை இல்லாதவர்கள், அல்லது அன்றாட கூலி தொழிலாளர்கள், விபத்து அல்லது நோயினால் உடல் நலிவுற்றோர், வேலை இழந்தவர்கள், இவர்களுக்கு உதவ நான் சமூக நலனபிவிருத்தி துறையுடன் தொடர்பு கொண்டு சிலருக்கு உதவி வாங்கித் தந்துள்ளேன். அதனுடன் மாநில அரசின் உணவு உதவி திட்டங்கள் வழியும் மந்திரி புசார் கட்டமைப்பு மூலமும் உதவிகள் பெற்றுத் தந்துள்ளோம். இருப்பினும் அவை அனைத்தும் யானைப் பசிக்கு சோளப்பொரி மாதிரி. என்கிறார்.

இங்குள்ளவர்களுக்கு வேலை வேண்டும், போதுமான ஊதியம் தேவை, இளைய சமுதாயத்தை கல்வியில் ஊக்குவிக்க வேண்டும், இடைநிலை கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு கைத்தொழில் துறைகளில் குறுகிய காலப் பயிற்சிகள் வழங்குவது மற்றும் தொழில் கல்வியில் ஈடுபடுத்த வேண்டும். கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தும் தொடர் ஊக்குவிப்பு பிரச்சாரங்களும் பட்டறைகள் நடத்தக் கல்வி கழகங்கள் பட்டதாரிகள் முன் வர வேண்டும்.

குற்றச்செயல்களில், குறிப்பாகப் போதைப்பொருள் விநியோகக் கும்பல்களிடமிருந்து நம் பிள்ளைகளைக் காப்பது போன்ற நடவடி-க்கைகளுக்கு அதிகமான வெளியார் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் தேவைப்படுகிறது.

சில நண்பர்கள் மற்றும் கெ அடிலான் உதவியுடன் சில சமையல் பட்டறைகளை ஏற்பாடு செய்தாலும், மகளிருக்கு உதவத் தனிப் பிரிவு தேவைப்படுகிறது. இளம் யுவதிகள் முதற்கொண்டு, திருமண உறவு முறிந்த பெண்கள் மற்றும் பிள்ளைகளுடன் தனித்து வாழும் பெண் எனப் பல சமூகப் பிரச்சினைகள் உண்டு என்கிறார்.

சொக்சோ எனப்படும் சமூகத் தொழில் பாதுகாப்பு நிறுவன இழப்பீடு தொகைகள் காலத்துக்கு அப்பாற்பட்டுள்ளது. இன்றைய விலைவாசி களுக்கு ஏற்ப இல்லை, பல விண்ணப்பங்கள் பல முறை இழுத்தடிக்கப்பட்டு நிராகரிக்கப் படுதல் உண்டு, நோய் நொடியில் ஊனமுற்றவர்கள் பல பொருளாதாரச் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு சொக்சோ உதவி மறுக்கப்பட்டாள் அவரை நம்பியுள்ள குடும்பத்தின் நிலை என்னவாகும்?

அது போன்ற விவகாரங்களுக்கு உதவத் தகுதி வாய்ந்த விஷயம் தெரிந்தவர்கள் உதவியும் தேவைப்படுகிறது. பாலர் பள்ளி கல்வி, போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு பொதுவாகச் சமுதாயத்திற்குத் தொடர்ச்சியான உதவித் தேவைப்படுகிறது. தொடர்புக்கு **PERSATUAN SKUAD KEBAJIKAN SERI SETIA PENGURUSI P.MUTHU 0162492418**

நான் கடந்த 2008ம் ஆண்டு முதல் சுமார் 700க்கு மேற்பட்டவர்களுக்கு சமூக நல இலாக்காவிடமிருந்து உதவி, இளையோருக்கு தொழிற்கல்விக்கு ஊக்குவிப்பு, ஊனமுற்றவர்-களுக்கு உதவிகளைப் பெற்று வழங்கினாலும். அனைத்தும், கானல் நீராகி விடுகிறது. தேவைகள் அதிகமுண்டு சமுதாயத்தின் தொடர்ச்சியான முன் முயற்சி இன்றி , இங்கு ஏழ்மை பிணி அகலாது என்று தன் மன வேதனையை வெளியிட்டார் P. முத்து.

செய்தி : ரா. ராஜா

# ஆலயங்களுக்கு மானியமும், நிலமும் வழங்குவது மக்கள் மகிழ்ச்சி



**சிலாங்கூர்,** நாட்டின் பிரதான நுழை வாயிலா-கவும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24 விழுக்காட்டு பங்களிப்பை வழங்கும் மாநிலமாகவும் விளங்கி வருகிறது.

அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட இந்த மாநிலத்தில் வசிப்பவர்கள் எண்ணிக்கை 60 லட்சத்தைத் தாண்டும். இதில் இந்தியர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 11 விழுக்காடாகும். இம்மாநிலத்தின் செல்வச் செழிப்பிற்கு முதுகெலும்பாக விளங்கியது ஈயமும், ரப்பரும் இந்த இரண்டு தொழில் துறைகளுடன் அதிக ஈடுபாடு கொண்ட இனங்களாக இன்றும் கூறப்படுவது இந்தியர்களும், சீனர்களுமே. ஆம் இம் மாநிலம் முழுவதும் ரப்பர் தோட்டங்களால் சூழப்பட்டு, கிள்ளான் ஆற்றுப் பள்ளத்தாக்கு ஈய தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது அன்றைய சிலாங்கூர்.

**ஆலயம் உடைப்பு குடிசை ஒழிப்பு ஆட்சி மாற்றத்திற்கு வழி.**

மாநிலம் முழுவதும் பரந்து விரிந்து கிடந்த தோட்டங்களில் வாழ்ந்து மக்கள் ஒவ்வொரு தோட்டத்திற்கும் சில ஆலயங்களைக் கட்டி தங்கள் வழிப்பாடுகளை நூறு ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வந்தனர். ஆனால் இந்நாட்டு. சுதந்திரத்திற்குப் பின் இம்மாநில நிலப்பரப்பின் அடையாளத்தை மாற்ற எண்ணியவர்கள் தோட்டங்களை மட்டுமே அழித்து வந்தனர்.

ஆனால், அதன் பின் வந்த சிலர், அடையாளங்களையும் அழிக்க முற்பட்டனர், குறிப்பாக 1997 முதல் 2007ம் ஆண்டு வரை இம்மாநிலத்தில் முன்னால் தோட்டங்களில் வீற்றிருந்த நூற்றுக்கணக்கான கோவில்கள் அழிக்கப்பட்டது. அதன்பின் பூஜ்ஜியம் குடிசை என்ற கோட்பாட்டுடன் இம்மாநிலத்தில் உள்ள குடிசைகளும் அதன் ஊடே இருந்த கோவில்களும் உடைக்கப்பட்டன. அந்த வரிசையில் உடைபட்ட ஒரு ஆலயமே **ஷா ஆலம் ரிம்பா ஜெயா மகா மாரியம்மன் ஆலயம்**! அதிதீவிர சமயவாத அரசியலினால் ஒரு ஆட்சி வீழ்ந்தது.

சிலாங்கூர் மாநிலத்தைப் பக்கத்தான் கூட்டணி கடந்த 2008ஆம் ஆண்டு ஆட்சி புரியத் தொடங்கியது முதல் கல்வி, பொருளாதாரம், சமயம் மற்றும் சமூகவியல் துறையில் இந்தியர்களின் நலன் தொடர்ந்து கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள இந்தியர்களில் இந்துக்கள் பிரதானச் சமயத்தினராக உள்ள நிலையில் அவர்கள் சார்ந்த வழிபாட்டு தலங்களின் வளர்ச்சியிலும் மாநில அரசு முழு அக்கறை காட்டி வருகிறது.

“இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்“ எனும் ருக்குன் நெகாரா கோட்பாட்டிற்கு ஏற்பச் சர்வச் சமயங்களுக்கும் மதிப்பளித்து அவற்றின் மேம்பாட்டிற்குச் சிலாங்கூர் மாநில அரசு மானியங்களை வழங்கி வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள ஆலயங்கள் வெறும் வழிபாட்டு தலங்களாகவும் சமயத்தின் அடையாளச் சின்னமாகவும் மட்டுமின்றி சேவையாற்றும் சமூக மையங்களாகவும் திகழ்வதை மாநில அரசு உறுதி செய்து வருகிறது.

ஈராண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் 2021ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பாதி-க்கப்பட்ட மக்களுக்கு ஆலயங்கள் வழங்கிய அளப்பரிய உதவிகளை யாரும் மறுக்க முடியாது. பக்கத்தான் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகுதான் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டதாக கூறப்படும் இத்தகைய ஆலயங்களைப் பலவந்தமாக உடைக்கும் சம்பவங்கள் வெகுவாகக் குறைந்தது. ஆலயங்களுக்கு மாற்று நிலங்களும், நிதியும் வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு ஆலயங்கள் சொந்த நிலம் பெற்றன.

இஸ்லாம் அல்லாத சமயங்களுக்கான உதவிகளை ஒருங்கிணைப்பதற்கும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஏதுவாக லீமாஸ் எனப்படும் பௌத்த, கிறிஸ்துவ, இந்து சீக்கிய மற்றும் தோ சமயங்களுக்கான செயல் குழுவைச் சிலாங்கூர் மாநில அரசு அமைத்துள்ளது.

இந்த லீமாஸ் அமைப்பு டத்தோ தெங் சாங் கிம் தலைமையிலான முதலீட்டு துறைக்கான ஆட்சிக்குழுவின் கீழ் உள்ள வேளையில் இதன் இணைத் தலைவராக மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் உள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டில் பக்கத்தான் மாநில அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின்னர் இந்து ஆலயங்களுக்கு வருடாந்திர மானியாக 10 லட்சம் வெள்ளி வழங்கப்பட்டு வந்தது. பின்னர் 2018ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இந்த மானியம் 18 லட்சம் வெள்ளியாக உயர்த்தப்பட்டது.

இவ்வாண்டு தொடங்கி ஆலயங்களுக்கான மானியம் 25 லட்சம் வெள்ளியாக உயர்த்த-ப்படுவதாக ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் அண்மையில் கூறினார். இந்த மானியத்தின் வாயிலாக ஆண்டு-தோறும் சுமார் 200 ஆலயங்கள் வரை பயன் பெறுவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.



ஆலயங்களில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வது தரம் உயர்த்துவது மற்றும் சமய நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற நோக்கங்களுக்காக இந்த நிதி வழங்கப்படுகிறது. இது தவிர மாநிலத்தில் உள்ள 200 ஆலயங்களின் நிலப்பிரச்சினை தீர்க்கப்பட்டு அவற்றுக்கு நில உரிமை பெறப்பட்டுள்ள தகவலையும் கணபதிராவ் வெளியிட்டார்.

ஆலயங்களுக்கு மானியம் வழங்குவது தவிர்த்துத் தீபாவளி, தைப்பூசம் மற்றும் பொங்கல் போன்ற பண்டிகைகளையும் மாநில நிலையில் அரசு ஏற்பாடு செய்து வருகிறது. குறிப்பாகத் தீபாவளி கொண்டாட்ட நிகழ்வு கிள்ளான், லிட்டில் இந்தியா பகுதியில் வருடந்தோறும் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகிறது.

இவ்வாண்டு மாநில நிலையிலான பொங்கல் நிகழ்வு ரவாங், செமினி பண்டார் ரிஞ்சிங் ஆகிய இடங்களிலும் இதன் பிரதான நிகழ்வு ஷா ஆலம் தாமான் ஸ்ரீ மூடா ஸ்ரீ சொர்ண மகா மாரியம்மன் ஆலயத்திலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாநில அரசு நிலையிலாகத் தைப்பூச விழா நிகழ்வு ஒவ்வோராண்டும் பத்துமலை ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில் தேவஸ்தான வளாகத்திலும் கெர்லிங், ஸ்ரீ சுப்பிரணியர் ஆலயம் மற்றும் கோல சிலாங்கூர் 2வது மைல், ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்திலும் நடைபெறும்.

இவ்வாண்டு தைப்பூச விழாவின் போது மாநில அரசின் ஏற்பாட்டில் பத்துமலையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வுக்கு மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் 45 ஆலயங்களுக்கு மாநில அரசின் மானியமாக 650,000 வெள்ளி வழங்கப்பட்டன.

மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ- கணபதிராவ் தலைமையில் தாமான் ஸ்ரீ மூடா ஸ்ரீ சொர்ண மகா மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மாநில நிலையிலான பொங்கல் விழாவில் 15 ஆலயங்களுக்கு 255,000 வெள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆலயங்களின் மேம்பாட்டிற்கு மாநில அரசு தொடர்ந்து வழங்கி வரும் நிதியுதவியும் தார்மீக ஆதரவும் இம்மாநிலத்தில் நமது சமயமும் கலாசாரமும் தழைத்தோங்கி இறை நெறியும் ஒழுக்கமும் நிறைந்த சமூகமாக நாம் உருவாக்கம் காண்பதற்கு பெரிதும் துணை புரியும் என்றால் அது மிகையில்லை.

செய்தி : ரா. ராஜா



மலேசிய சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த

# ஜென்ஜாரோம் தமிழ்ப்பள்ளி

**கோல லங்காட்** மாவட்டத்தின் ஜென்ஜாரோம் பகுதியில் அமைந்துள்ளது இந்த ஜென்ஜாரோம் தமிழ்ப்பள்ளி. திருமதி க.லோகேஸ்வரியை தலைமையாசிரியராகக் கொண்டு 326 மாணவர்கள் மற்றும் 22 ஆசிரியர்களுடன் சிறப்பாக இயங்கி வரும் இப் பள்ளியில், இரு பாலர் பள்ளி வகுப்புகளும் உள்ளன.

சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அரசாங்கத்தின் முழு உதவியோடு செயல்பட்டு வரும் இப்பள்ளி சுமார் 70 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டுள்ளது. கடந்த 2-3-1953ஆம் ஆண்டில் சீனப்பள்ளியிடமிருந்து இரவலாகப் பெறப்பட்ட ஒரு வகுப்பறையுடன் தனது வரலாற்றைத் தொடக்கியது இப்பள்ளி.

தமிழ்ப் பள்ளிக்கு தனி கட்டிடம் வேண்டும் என்ற எண்ணம் வட்டார மக்கள் மனதில் உதிக்க, மறைந்த முத்து மண்டோர், மாமுண்டி மண்டோர் மற்றும் அப்துல் ரஹ்மான் ஆகியோரைக் கொண்ட கட்டிடக் குழு அமைக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு 49 மாணவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்களுடன் பள்ளி செயல்படத் தொடங்கியது, என சிலாங்கூர் இன்று பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் முருகு சரவணன் முத்தையா கூறினார்.

மாணவர்கள் எண்ணிக்கை உயர்வினால் 1960ஆம் ஆண்டு மேலும் இரு வகுப்பறைகள் கட்டப்பட்டன. அருகில் உள்ள லுண்டர்ஸ்டோன் மற்றும் தஞ்சோங் டுவா பிளாஸ் தோட்டத் தமிழ்ப் பள்ளிகளும் ஜென்ஜாரோம் பள்ளியுடன் இணைக்கப் பட்டன. கடந்த 1984 ஆம் ஆண்டில் மேலும் இரு வகுப்பறைகள் கட்டப்பட்டன.

கடந்த 1999 ஆம் ஆண்டுதான் இப்பள்ளி வரலாற்றில் புதிய திருப்புமுனை ஏற்பட்டது. ஏழாவது மலேசியத் திட்டத்தின் கீழ் அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு எட்டு வகுப்பறைகள் மற்றும் பல்வேறு வசதிகளுடன் கூடிய மூன்று மாடி கட்டிடத் தொகுதியை இப்பள்ளி கண்டது என அவர் சொன்னார்.

கடந்த 2008 ஆம் ஆண்டில் பள்ளியின் பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு மேலும் ஒரு மூன்று மாடிக் கட்டிடமும் கூடுதலாக ஒரு பாலர் பள்ளியும் நிர்மாணிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் யாயாசான் டிடேக் மற்றும் யாயாசான் ஏயோன் இணைந்து விவேக வகுப்பறையை பள்ளியில் உருவாக்கின.

புதிய கட்டிடத் தொகுதியில் வாழ்வியல் திறன் பட்டறை, நூலகம், கருவளம் மையம், ஆசிரியர் அறை, நடவடிக்கை அறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

அடிப்படை வசதிகள் ரீதியாக மிகப்பெரிய வரலாற்று மாற்றத்தை உருவாக்கி அதில் தனித்துவத்துடன் பயணத்தை மேற்கொண்ட இப்பள்ளி 2015ஆம் ஆண்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிலும் தடம் பதிக்க ஆரம்பித்தது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் குறிகோளாக கொண்ட இந்த புத்தாக்க முன்னெடுப்புகள் இன்று வரை தொடர்ந்த வண்ணம் உள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாவட்ட, மாநில, தேசிய மற்றும் அனைத்துலக நிலையில் புத்தாக்கப் போட்டிகளில் இப்பள்ளி மாணவர்கள் பல பதக்கங்களை வென்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். கடந்த 2020ஆம் ஆண்டு கண்டுபிடிப்பு துறையில் சாதனைப் படைத்து மலேசிய சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்ற முதல் தமிழ்ப்பள்ளி என்ற பெருமையையும் ஜென்ஜாரோம் தமிழ்ப்பள்ளி பெற்றது.

புத்தாக்கத் துறை மட்டுமின்றி விளையாட்டுகளிலும் இப்பள்ளி பல சாதனைகளைப் படைத்து வருகிறது. சதுரங்கப் போட்டியிலும் சிறப்பான வெற்றிகளை இப்பள்ளி பதிவு செய்துள்ளதோடு கடந்தாண்டு நடைபெற்ற மாவட்ட நிலையிலான குறுக்கோட்டப் போட்டியிலும் மாணவர்கள் பங்கெடுத்து பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். மாவட்ட மற்றும் மாநில நிலையிலான கபடி போட்டிகளிலும் இப்பள்ளி மாணவர்கள் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட நிலையிலான திடல்தடப் போட்டியில் மாணவி ஒருவர் மூலம் சிறந்த விளையாட்டு வீரங்கானை கான விருதைப் பெற்றதன் மூலம் தமிழ்ப்பள்ளி வரலாற்றில் ஜென்ஜாரோம் பள்ளி தனியிடத்தைப் பெற்றது.

இந்த பள்ளியின் வளர்ச்சிக்கு மாநில அரசு பொருளாதார மற்றும் தார்மீக ரீதியில் அளப்பரிய பங்கினை ஆற்றி வருகிறது. கடந்தாண்டில் கூட மாநில அரசின் சார்பில் இப்பள்ளிக்கு 40,000 வெள்ளி வழங்கப்பட்டது. இது தவிர பள்ளி வளர்ச்சி தொடர்பான விஷயங்களில் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் பயன்மிக்க ஆலோசனைகளை வழங்கி வருகிறார். மேலும், பந்திங் சட்டமன்ற உறுப்பினர் லாவ் வேங் சானும் பள்ளிக்கு தேவையான உதவிகளை வழங்கி வருவதோடு பள்ளி நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து வருகிறார் என முருகு சரவணன் குறிப்பிட்டார்.

இப்பள்ளி மாணவர்கள் கல்வி, புறப்பாட நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழிலில் தேர்ச்சி பெற்றிருப்பதை உறுதி செய்வது தங்களின் எதிர்காலத் திட்டம் ஆகும், அதன் அடிப்படையில் மாணவர்களுக்கு வாகன பழுது பார்ப்பு தொடர்பான அடிப்படை பயிற்சிகளை வழங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மேலும், மாணவர்கள் மத்தியில் மொழியாற்றலை மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் நாங்கள் கொண்டுள்ளோம். மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியேறும் போது தமிழ், மலாய், ஆங்கிலம், சீனம், ஜப்பான் ஆகிய ஐந்து மொழிகளை அறிந்திருப்பதை உறுதி செய்வது எங்களின் இலக்காகும் என அவர் சொன்னார்.




**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*

## ரஹ்மா ரொக்க உதவித் திட்டத்தில்
### 574,886 விண்ணப்பங்கள்

**கோலாலம்பூர்**, ரஹ்மா ரொக்க உதவித் திட்டத்திற்கு (எஸ்.டி.ஆர்.) இதுவரை 574,886 புதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

முதல் கட்ட எஸ்.டி.ஆர். திட்டத்தின் கீழ் 87 லட்சம் பேருக்கு 167 கோடி வெள்ளி கடந்த ஜனவரி மாதம் 17ஆம் தேதி பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் இரண்டாம் கட்ட நிதியளிப்பு வரும் ஏப்ரல் 5ஆம் தேதியும் மூன்றாம் கட்ட நிதியளிப்பு ஆகஸ்டு அல்லது அக்டோபர் மாதத்திலும் வழங்கப்படும் என்று அவர் சொன்னார்.

இவ்வாண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் 123,243 குடும்பத் தலைவர்கள் பரம ஏழைகளாக வகைப்படுத்தப்பட்டு இ-காசே திட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டில் இதுவரை இந்த திட்டத்திற்கு புதியவர்கள் சேர்க்கப்படாத காரணத்தால் பரம ஏழைகளின் எண்ணிக்கையை 130,000 ஆக உயர்த்த நான் முடிவெடுத்துள்ளேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

சமீபத்திய நிலவரங்கள் மற்றும் அனைத்துத் துறைகளின் திறன் அடிப்படையில் பரம ஏழைகள் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என நம்புகிறேன் என்று அவர் மக்களவையில் இன்று அமைச்சர்களின் கேள்வி பதில் அங்கத்தின் போது கூறினார்.

வறுமையை ஒழிப்பதில் ஒற்றுமை அரசாங்கம் மேற்கொண்டு வரும் திட்டங்கள் மற்றும் அதன் ஆக்கத் தன்மை குறித்து ஜெலுபு உறுப்பினர் டத்தோஸ்ரீ ஜலாலுடின் அலியாஸ் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## இன மோதல்களில் சிக்காமல் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பேன்

**கோலாலம்பூர்**, குறுகிய இன மோதல்களில் சிக்காமல் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க அரசாங்கம் முயற்சிக்கும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

சமூகத்தை பிளவுபடுத்தும் வகையில் அடையாள அரசியலைப் பயன்படுத்துபவர்களின் முயற்சிகளுக்கு அரசாங்கம் முற்றுப்புள்ளி வைக்கும் என தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"நாம் இதுவரை சாதித்துள்ள இன ஒற்றுமைக்கான திறவுகோல் பரஸ்பர மரியாதை ஆகும், இது நாகரீக மலேசியாவை வளர்ப்பதில் முக்கியமான கூறுகளில் ஒன்றாகும்" என்று குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோங்க்ரான் தின கொண்டாட்டத்துடன் இணைந்து, சியாம் வம்சாவளியைச் சேர்ந்த முழு சமூகமும் மற்ற மலேசியர்களுடன் ஒன்றிணைந்து, நாட்டை மேம்படுத்த ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் பேணும் அதே வேளையில் அதன் இலக்குகளையும் உறுதியையும் பகிர்ந்து கொள்ளுமாறு அன்வார் அழைப்பு விடுத்தார்.

"அதன் மூலம், நாங்கள் ஒன்றாக மலேசியாவை வளர்ந்த மற்றும் வளமான தேசத்தை நோக்கி அழைத்துச் செல்வோம். மலேசியாவில் உள்ள ஒட்டு மொத்த சியாம் சமூகத்தினருக்கும் சோங்க்ரான் திருவிழா வாழ்த்துக்கள்" என்று அவர் கூறினார்.

தண்ணீர் திருவிழா என்று பிரபலமாக அறியப்படும் சோங்க்ரான் தாய்லாந்து புத்தாண்டு கொண்டாட்டமாகும், இது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 13 முதல் மூன்று நாட்கள் கொண்டாடப்படுகிறது.

## பிரதமர் சித்திரை புத்தாண்டு, வைசாகி
### வாழ்த்துகளை தெரிவித்தார்

**கோலாலம்பூர்,** மலேசியாவில் உள்ள இந்து தமிழர்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களையும், சீக்கியர்களுக்கு வைசாகி திருநாள் வாழ்த்துகளையும் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

இன்று தனது முகநூல் பதிவில், புத்தாண்டு அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகவும், குடும்ப உறவுகள் மகிழ்ச்சியுடன் வலுவாக இருக்க வேண்டும் என்றும் அன்வார் நம்பிக்கை தெரிவித்தார்.

"நாட்டிலுள்ள அனைத்து மலேசியர்களையும் நல்லிணக்கத்தையும் பரஸ்பர மரியாதையையும் வலுப்படுத்தவும் பராமரிக்கவும் நான் அழைக்கிறேன்," என்று அவர் கூறினார்.

தமிழ் புத்தாண்டு என்றும் அழைக்கப்படும் சித்திரை புத்தாண்டு என்பது தமிழ் நாட்காட்டியின் முதல் நாளாகும், இது பாரம்பரியமாக தமிழர்களால் தமிழ் மாதமான சித்திரை முதல் நாளில் கொண்டாடப்படுகிறது.

மறுபுறம், வைசாகி, சீக்கிய மற்றும் பஞ்சாபி நாட்காட்டிகளின் படி அறுவடை பருவத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

## சீனப் பயணத்தின் வழி 244 கோடி வெள்ளி - ஏற்றுமதி வாய்ப்பு

**கோலாலம்பூர்,** பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த வாரம் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் வாயிலாக 244 கோடி வெள்ளி மதிப்பிலான ஏற்றுமதி வாய்ப்புகளை மலேசியா பெற்றுள்ளது.



மலேசியாவிலிருந்து செம்பனை எண்ணெய், உணவு, பானங்கள், டுரியான் மற்றும் இரும்புப் பொருள்களை கொள்முதல் செய்ய சீன இறக்குமதியாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளதாக மாட்ரேட் எனப்படும் மலேசிய வெளி வர்த்தக மேம்பாட்டுக் கழகம் கூறியது.

மலேசியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக சீனா விளங்கி வருவதாக அக்கழகம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறியது.

மலேசியா கடந்தாண்டு 4,800 கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருள்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ததாக அது குறிப்பிட்டது.

பிரதமர் தனது சீனப்பயணத்தின் ஒரு பகுதியாக மலேசிய மற்றும் சீன நாட்டு முதலீட்டாளர்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் சடங்கையும் பார்வையிட்டார்.

மலேசியாவில் பெட்ரோகெமிக்கல் மற்றும் வாகனத் தொழில் துறையில் 3,860 கோடி டாலரை சீனா முதலீடு செய்யவுள்ளதாகப் பிரதமர் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

## நாட்டின் வளங்களைச் சுரண்டியவர்களுக்கு
### எதிரானப் போராட்டத்தில் சமரசம் கிடையாது

**ஈப்போ,** நாட்டின் வளங்களைச் கொள்ளையடித்தவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் விஷயத்தில் தாம் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளப்போவதில்லை என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் சூளுரைத்துள்ளார்.

நாட்டின் கருவூலத்தையும் சொத்துகளையும் கொள்ளையிட்டு தங்களை வளப்படுத்திக் கொண்டத் தலைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றும்படி அரசாங்கத்திற்கு தாம் உத்தரவிட்டுள்ளதாக அவர் சொன்னார்.

இது எனது வாக்குறுதி. சாதகமோ, பாதகமோ அதனை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். நான் ஊழலுக்கு எதிராகப் போராடுவதால் என்னை வீழ்த்த எல்லா வகைகளிலும் முயற்சி மேற்கொள்ளப்படலாம். ஆனால், நான் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ள மாட்டேன். கொள்ளையிடும் கும்பலிடமிருந்து நாட்டை பாதுகாப்பேன் என்று அவர் மேலும் கூறினார்.

கொள்ளையடிக்கப்பட்ட சொத்துகள் கொஞ்ச நஞ்சமல்ல. அரசாங்கத் தலைவர்கள், அமைச்சர்கள், மாநில ஆட்சிக்குழு உறுப்பி-னர்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக, குறிப்பாக எச்சரிக்கை விடுத்தப் பின்னரும் அத்தகைய செயல்களை தொடர்ந்து புரிவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி ஊழல் தடுப்பு ஆணையத்தை நான் பணித்துள்ளேன் என்றார் அவர்.

நேற்றிரவு இங்குள்ள அல்-இத்திஹாடியா பள்ளிவாசலில் நடைபெற்ற நோன்பு துறக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். பெர்லிஸ் மாநில முன்னாள் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அஸ்லான் மான் மீதான் ஊழல் வழக்கில் தாம் சம்பந்தப்படவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.




# ஆன்லைன் மோசடிகளில் பாதிக்கப்பட்டவர்கள் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான சட்டத்தை ஆய்வு செய்வோம்

**கோலாலம்பூர்,** ஆன்லைன் மோசடிகளால் பாதிக்கப் பட்டவர்களுக்குப் பணத்தைத் திரும்பப் பெற அனுமதிக்கும் வகையில் சட்டத்தில் உள்ள பல விதிகளை அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது என்று செனட் சபையில் இன்று தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் துறையின் துணை அமைச்சர் (சட்டம் மற்றும் நிறுவன சீர்திருத்தம்) ராம்கர்பால் சிங் கூறுகையில், பணமோசடி தடுப்பு, குற்றவியல் நடைமுறைச் சட்டம், சட்டவிரோத நடவடிக்கை சட்டம் எண் 200 கீழ் மற்றும் தண்டனைச் சட்டம் ஆகியவை மதிப்பாய்வு செய்யப்பட்ட சட்டங்களில் அடங்கும்.

"அது தவிர, வெளிநாட்டில் இருக்கும் குற்றவாளிகளுக்கு எதிராக மேலும் நடவடிக்கை எடுக்கப் படுவதை உறுதி செய்வதற்காக, சர்வதேச அதிகாரிகளுடன் அதிக முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் இந்த குற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் செயல்படுத்தும். வங்கி நிறுவனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் உட்பட பல்வேறு ஏஜென்சிகள் பணியாளர்கள் மற்றும் நிபுணர்களை ஒருங்கிணைக்கும் என்.எஸ்.ஆர்.சி. யின் செயல்பாட்டின் மூலம் அமலாக்க நடவடிக்கைகளையும் செயல்படுத்த முடியும் என்று ராம்கர்பால் கூறினார்.

"சந்தேகத்திற்குரிய நிதி பரிவர்த்தனைகளை கண்காணிப்பது, மோசடி செய்பவர்கள் பயன்படுத்தும் தொலைபேசி அழைப்புகளை கண்காணிப்பது, மோசடி செய்யப்பட்ட பண பரிமாற்றத்தை தடுப்பது மற்றும் மோசடி செய்பவர்கள் பயன்படுத்தும் தொலைபேசி எண்களை ரத்து செய்வது ஆகியவை இதில் அடங்கும்" என்று அவர் கூறினார்.

# 18.06 மில்லியன் கோழி முட்டைகளை விநியோகித்து உள்ளது



**கோலாலம்பூர்,** மத்திய வேளாண் சந்தைப்படுத்தல் ஆணையம் (ஃபாமா) கடந்த ஆண்டு நவம்பர் முதல் இன்று வரை மொத்தம் 18.06 மில்லியன் கோழி முட்டைகளை அதன் 368 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகித்து உள்ளது.

நாட்டில் முட்டையின் பற்றாக்குறையை சமாளிக்க ஏஜென்சியின் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்று ஃபாமா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"தொழில்துறை முனைவோர்களோடு ஒப்பந்த அமர்வுகளை நடத்துவதன் மூலமும், நாடு முழுவதும் கோழி முட்டையை சந்தைப்படுத்துதல் குறித்து விவாதிப்பதன் மூலமும் ஃபாமா செயலூக்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது" என்று அறிக்கை கூறுகிறது.

உணவுப் பாதுகாப்புப் பிரிவின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஃபாமா எப்போதும் வேளாண் உணவு கிடைப்பதை உறுதி செய்கிறது அல்லது நுகர்வோருக்கு வேளாண் உணவுகளின் சந்தைப்படுத்தல் சங்கிலி தொடர்ந்து பலப்படுத்தப்படுகிறது.

பிப்ரவரி 2023 வரை, ஃபாமா 1,568 சில்லறை விற்பனை நிலையங்களையும் 57,108 தொழில் முனைவோரையும் RM387 மில்லியன் செலவில் உருவாக்கியது.

"விவசாய தொழில் முனைவோர் தங்கள் விவசாயப் பொருட்களை நாடு முழுவதும் உள்ள சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைப் படுத்துவதற்கும் ஃபாமா அதன் சேவைகளை மேம்படுத்துகிறது.

அதே நேரத்தில் சந்தையில் எப்போதும் போதுமான விவசாய உணவுப் பொருட்கள் இருப்பதை உறுதிப்படுத்த நுகர்வோருக்கு உதவுகிறது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடியுரிமை கோரி 150,000 விண்ணப்பங்கள்



கோல திரங்கானு, உள்துறை அமைச்சு நாடற்றச் சிறார்கள் உள்பட 150,000 பேரிடமிருந்து குடியுரிமை விண்ணப்பங்களை இதுவரை பெற்றுள்ளதாக அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் கூறினார்.

இவ்வாண்டு ஜனவரி முதல் இதுவரை அமைச்சு 5,700 விண்ணப்பங்களைபரிசீலித்து அவற்றை ஏற்றுக்கொள்வதா நிராகரிப்பதா என்பதை முடிவு செய்துள்ளதாக அவர் சொன்னார். இவ்வாண்டு இறுதிக்குள் குறைந்தது 10,000 விண்ணப்பங்களை அமைச்சு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விண்ணப்பதாரர்கள் நாட்டில் தங்கியிராதது, இந்நாட்டில் தங்கியிருப்பதற்கான கடப்பாட்டைக் கொண்டிராதது, தேவைப்படும் ஆவணங்கள் தொடர்பான நிபந்தனைகளை பூரத்தி செய்யாதது போன்ற காரணங்களால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். குடியுரிமை விண்ணப்பத்திற்கான ஆவணத் தேவை சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்விவகாரத்தில் வேறு எந்த சட்டமும் செல்லுபடியாகாது. ஆகவே அந்த நிபந்தனைகளை உள்துறை அமைச்சு அவசியம் பின்பற்றியாக வேண்டும் என்றார் அவர்.

இங்குள்ள திரங்கானு மாநில போலீஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கே.டி.என். மடாணி நோன்பு துறப்பு நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே, மலேசிய குடிநுழைவுத் துறையின் அகப்பக்கம் மீது இணையத் தாக்குதல் நடத்திய ஊடுருவல்காரர்களை அதிகாரிகள் இன்னும் அடையாளம் காணவில்லை என்றும் சொன்னார்.

# தெங்கு அம்புவான் ரஹிமா மருத்துவமனை காத்திருப்பதை குறைக்க கிளாஸ்டர் முன்னோடி திட்டம்



**ஷா ஆலம்**, கடந்த சனிக்கிழமை கிள்ளான் தெங்கு அம்புவான் ரஹிமா மருத்துவமனையின் அவசர பிரிவு, நீண்ட காத்திருப்பு பிரச்சனையை சமாளிக்க கிளாஸ்டர் முன்னோடி திட்டத்தை (எச்டிஏஆர்) தொடங்கியது.

பண்டார் பொட்டானிக் ஹெல்த் கிளினிக் (கேகே) உடனான ஒத்துழைப்பு மூலம் மிதமான அறிகுறிகள் மற்றும் அவசரம் இல்லாத நோயாளிகள் உடனடி சிகிச்சை பெற அனுமதிக்கிறது என்று சுகாதார அமைச்சர் கூறினார்.

"கேகே பண்டார் பொட்டானிக், பொது விடுமுறை நாட்கள் உட்பட ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் இரவு 9.30 மணி வரை செயல்படுகிறது. நோயாளிகள் பதிவு செய்யும் நேரம் இரவு 9 மணி வரை மட்டுமே" என்று டாக்டர் ஜாலிஹா முஸ்தபா கூறினார்.

இந்த நடைமுறை அவசர சிகிச்சைப் பிரிவில் நெரிசலைக் குறைக்கும் என்று அவர் நம்புகிறார்.

திட்டத்தை விரிவு படுத்தும் முன், முன்னோடித் திட்டத்தின் வளர்ச்சியை மலேசியச் சுகாதார அமைச்சகம் (கேகேஎம்) கண்காணிக்கும் என்றும் அவர் கூறினார்.

# ஈ.பி.எஃப் சேமிப்பை வங்கி கடன்
## பிணையமாகப் பயன்படுத்துவதற்கான திட்டம்



**கோலாலம்பூர்,** ஊழியர் சேம நிதி சந்தாவை (ஈ.பி.எஃப்) உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கடனுக்கான பிணையமாகப் பயன்படுத்த அனுமதி ஆனது, ஈ.பி.எஃப் சட்டப் பிரிவு 51 னை மீறவில்லை என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராகிம் கூறினார்.

நிதியமைச்சராக இருக்கும் பிரதமர் அவர்கள், இந்த விஷயத்தில் சட்ட ஆலோசனைக்காக அரசாங்கம் ஈ.பி.எஃப் மற்றும் அட்டர்னி ஜெனரலின் ஆலோசனைகளை பெற்றதாக அவர் கூறினார் வங்கிக் கடன்களுக்கு விண்ணப்பிக்கும் இந்த முறை, ஈ.பி.எஃப் உறுப்பினர்களின் நலன்களை பாதிக்காது, ஏனெனில் அவர்கள் பிணையமாகப் பயன்படுத்தும் சேமிப்பிற்கு லாப ஈவுகளை தொடர்ந்து பெறுவார்கள். "உதாரணமாக, ரி.ம 50,000 கடனுக்காக பயன்படுத்தப்படுகிறது, ஆனால் அசல் தொகைக்கு ஏற்ப லாப ஈவு தொகை முழுமையாக வழங்கப்படும்.

அதனால் எந்தக் கழிவும் (லாபத் தொகை) இல்லை," என்று அவர் இன்று டேவான் ராக்யாட்டில் அமைச்சரின் கேள்வி நேரத்தின் போது (எம். க்யு. தி) கூறினார். சுங்கை புசார் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ முஸ்லிமின் யஹாயாவின் இந்த திட்டம் ஈ.பி. எஃப் சட்டத்தை மீறுமா என்றும், பிரதமர் இது தொடர்பாக அட்டர்னி ஜெனரலிடம் ஆலோசனை கேட்டாரா என்ற துணைக் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

# மித்ரா சிறப்புக் குழுவின் தலைவராக
## டத்தோ ரமணன் நியமனம்

**கோலாலம்பூர்,** மித்ரா எனப்படும் இந்திய சமூக உருமாற்றப் பிரிவின் சிறப்பு செயல்குழுத் தலைவராக சுங்கை பூலோ நாடாளுன்ற உறுப்பினர் டத்தோ ஆர்.ரமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை நேற்று உறுதிப்படுத்திய பி.கே.ஆர். கட்சியின் தேசிய தகவல் பிரிவுத் துணைத் தலைவருமான ரமணன், இந்த சிறப்புக் குழு உறுப்பினர்களாக நால்வர் நியமனம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். செனட்டர் சிவராஜ் சந்திரன் (மஇகா), கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கணபதிராவ் (ஜசெக), சிகாமாட் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யுனேஸ்வரன் (பி.கே.ஆர்.) மித்ரா தலைமை இயக்குநர் கே.ரவீந்திரன் நாயர் ஆகிய உறுப்பினர்களுடன் தாம் சந்திப்புக் கூட்டத்தை நடத்தவுள்ளதாக அவர் சொன்னார்.

இந்திய சமூகத்தை சமூக,பொருளாதார ரீதியில் உயர்த்தும் நோக்கில் இந்த அமைப்பை முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் கடந்த 2013ஆம் ஆண்டு தொடக்கினார். முன்பு இது இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு (செடிக்) என அழைக்கப்பட்டது.



கடந்த 2018ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து செடிக் அமைப்பு கலைக்கப்பட்டு பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் கீழ் மித்ரா எனும் பெயரில் மீண்டும் உயிரூட்டப்பட்டது. பக்கத்தான் ஆட்சி கவிழ்ந்தப் பின்னர் மித்ரா அமைப்பு ஒற்றுமைத் துறை அமைச்சின் கட்டுப்பாட்டில் வைக்க-ப்பட்டது. கடந்த 2021ஆம் ஆண்டு பல கோடி வெள்ளி ஊழல் அம்பலமானதைத் தொடர்ந்து மித்ரா பெரும் சர்ச்சையில் சிக்கியது.

ஒற்றுமை அரசாங்கத்தின் கீழ் இந்த அமைப்பு மீண்டும் பிரதமர் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மித்ரா அமைப்புக்கு 10 கோடி வெள்ளி ஒதுக்கப்படுவதாக இவ்வாண்டு தொடக்கத்தில் 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அறிவித்தார்.

# தொழிலாளர் பயணத்தை எளிதாக்க வேன்-ஹைலிங் சேவை



**ஷா ஆலம்,** புக்கிட் காசிங் தொகுதியில் நேற்று கும்பல் 2.0 வேன்-ஹைலிங் சேவையைத் தொடங்கியது. பெட்டாலிங் ஜெயாவில் உள்ள தொழிலாளர்களை இலக்காகக் கொண்டு இச் சேவை தொடங்கப்பட்டது என்று அதன் பிரதிநிதி ஆர் ராஜீவ் கூறினார்.

"இப்போது தாமான் ஜெயா மற்றும் ஆசியா ஜெயா எல்ஆர்டி நிலையங்களில் இருந்து, இரண்டு தேர்வுகள் உள்ளன. மின்சார ஸ்கூட்டர் (இ-ஸ்கூட்டர்) ஒலக்யா அல்லது கும்பூல் சேவை ஆகும்.

"1 ரிங்கிட் மட்டுமே செலுத்தி நீங்கள் பின்வரும் நிறுத்தங்களில் ஏறலாம் மற்றும் இறங்கலாம்," என்று அவர் முகநூல் மூலம் கூறினார். ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை எளிதான, வசதியான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து அணுகலுக்கான, RM1க்கு குறைவான கட்டணத்தில், போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்துமிட நெரிசலைக் குறைக்க, கடந்த ஆண்டு ஏப்ரல் 11ஆம் தேதி புக்கிட் காசிங் தொகுதியில் கும்பூல் ரைடு அறிமுகப்படுத்தப்பட்டது. பேருந்து நிலையங்கள், எல்ஆர்டி மற்றும் அடர்ந்த குடியிருப்பு பகுதிகள் உட்பட 200க்கும் மேற்பட்ட நிறுத்தங்களை இந்த சேவை உள்ளடக்கியுள்ளது. மேலும் இதை Apple Store அல்லது Google PlayStore இல் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.



# தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி பட்டதாரிகளுக்குச் சம்பளம்

ஷா ஆலம், வர்த்தகம் மற்றும் தொழில்-துறை அமைச்சகம் (எம்ஐடிஐ) தொழில்-நுட்பம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி பட்டதாரிகளுக்குச் (டிவிஇடி) சம்பளம் வழங்குவது உள்ளிட்ட வர்த்தகக் கொள்கைகளை மாற்றியமைத்து ஒருங்கிணைக்க விரும்புகிறது.

நாட்டின் தொழிலாளர் சந்தையில் ஊதிய அமைப்பு மிகவும் குறைவாக இருப்பதால், பல வெளிநாட்டு தொழிலாளர்கள் அதை ஆக்கிரமித்துள்ளனர் எனத் துணை அமைச்சர் லீவ் சின் தோங் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இஸ்கண்டார் புத்ரியின் கூற்றுப்படி, தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் RM3,000 சம்பளம் பரிந்துரைக்கும் தேசியத் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி கவுன்சில் பரிந்துரை தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமானது.

"தொழில் வழங்குனர்கள் திறமையற்ற வெளிநாட்டு ஊழியர்களை தொடர்ந்து வேலைக்கு அமர்த்தும் போது, நமது திறமையான குடிமக்களுக்கு நியாயமான ஊதியம் வழங்க நிறுவனங்களுக்கு எண்ணம் இல்லை" என்று அவர் கூறினார்.

டி.வி.இ.டி பட்டதாரிகளுக்கு அதிக வேலை வாய்ப்புகளை திறக்க தொழில்துறையை ஆராய்வதற்கான எம்.ஐ.டி.ஐ-யின் திட்டங்கள் குறித்து டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி (கோம்பாக்-பக்கத்தான்) கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

கடந்த வாரம், டத்தோஸ்ரீ அஹ்மாட் சாஹிட் ஹமிடி, டி.வி.இ.டி பட்டதாரிகளுக்கு முதலாளிகள் அல்லது தொழில்துறையினர் குறைந்தபட்ச சம்பளமாக மாதம் 3,000 ரிங்கிட் வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்.



# சிலாங்கூர் எஃப்சி 4-0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ பகாங் எஃப்சியை வீழ்த்தியது

**பெட்டாலிங் ஜெயா,** கிளானா ஜெயாவில் உள்ள பெட்டாலிங் ஜெயா மாநகராட்சி அரங்கத்தில் (எம்பிபிஜே), நேற்று இரவு நடந்த எஃப்.ஏ கோப்பையின் 16-வது சுற்று ஆட்டத்தில் சிலாங்கூர் எஃப்.சி 4-0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ பகாங் எஃப்.சியை எளிதில் வீழ்த்தியது.

சுமார் 5,000 ரசிகர்கள் முன்னிலையில் விளையாடிய டான் செங் ஹோவின் அணி, 41வது நிமிடத்தில் நடு திடல் ஆட்டக்காரர் முகைரி அஜ்மல் மூலம் கோல் அடித்து முதல் பாதியை முடித்தது.

இரண்டாவது பாதியில் தொடர்ந்து மேரா குனிங் ஆட்டத்தின் வேகத்தை அதிகரிக்க, 59வது நிமிடத்தில் முகைரி மீண்டும் ஸ்கோரை இரட்டிப்பாக்கினார்.

விங்கர் பைசல் ஹலீம் போட்டி முழுவதும் முயற்சிகளை மேற்கொண்டு மூன்றாவது கோலை அடித்தார்.

மேலும், 71 வது நிமிடத்தில் ரெட் ஜெயண்ட் அணித்தலைவர் பிரெண்டன் கான் தனது அணிக்கான நான்காவது கோலைப் பெற்று தந்தார். மூன்று நிமிட கூடுதல் நேரத்துக்குப் பிறகு ஆட்டம் முடிவுக்கு வந்தது.

# சுவிஸ் ஓபன் சாம்பியன்ஷிப்பில்

## முதலாம் இடத்தை வெல்லும் தேசிய இரட்டையர்கள்

**கோலாலம்பூர்,** பேசலில் நடைபெற்ற சுவிஸ் ஓபன் சாம்பியன் ஷிப்பின் இறுதி ஆட்டத்தில் முதலாம் இடத்தை வெல்லும் தேசிய இரட்டையர் கோ சூன் ஹுவாட்-ஷெவோன் லாய் ஜெமியின் எண்ணம் நிறைவேறவில்லை. அவர்கள் சீனாவின் பேங் மற்றும் வெய் யா ஜின் ஜோடியால் வீழ்த்தப்பட்டனர்.

முதல் செட்டில், உலகத் தரவரிசையில் 11வது இடத்தில் இருக்கும் சூன் ஹுவாட்-ஷெவோன், சீன ஜோடிக்குக் கடும் போட்டியை கொடுக்க ஆற்றல் கொண்டவர்களாத் தோன்றினாலும், அச்சீன ஜோடியின் அபார ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

14-16 என பின்தங்கியிருந்த போது, இரண்டாவது செட்டை மெதுவாக தொடங்கிய மலேசிய ஜோடி, 21-19 என இரண்டாவது செட்டை வென்று ஸ்கோரை சமன் செய்து பிறகு ஆட்டத்தை இறுதி செட்டுக்கு இழுத்தது.

ஹுவாட்-ஷெவோன் தொடர்ந்து ஆற்றல் மிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், எதிர் போட்டியாளர் ஜோடியின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த அது போதுமானதாக இல்லை. இறுதியாக ஆட்டம் 21-17 எனச் சீன ஜோடிக்குச் சாதகமாக முடிந்தது.

2023 சீனா மாஸ்டர்ஸ் வெற்றியாளரை சூன் ஹுவாட்-ஷெவோன் சந்திப்பது இதுவே முதல் முறை ஆகும்.






# சிலாங்கூர் அரசின் பொது உபசரிப்பில் பங்கேற்க

## மாநில மக்களுக்கு மந்திரி புசார் அழைப்பு

**ஷா ஆலம்,** வரும் வெள்ளிக்கிழமை தொடங்கி மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களிலும் கட்டங் கட்டமாக நடத்தப் படவிருக்கும் நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் கலந்து கொள்ளுமாறு மாநில மக்களை மந்திரி புசார் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிப்பாங் மாவட்டத்தில் தொடங்கும் இந்த நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பு நிகழ்வு வரும் மே 14ஆம் தேதி கோம்பாக்கில் முடிவுக்கு வரும் என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கடந்தாண்டு தொடங்கப்பட்ட சிலாங்கூர் மாநிலத்தின் அனைத்து ஒன்பது மாவட்டங்களிலும் நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பை நடத்தும் பாரம்பரியத்தை இவ்வாண்டிலும் தொடரவிருக்கிறோம் என அவர் தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் மாநிலத்தின் அனைத்து நிலையிலான மக்களும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என அவர் மேலும் சொன்னார்.

கடந்தாண்டு மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட இந்த பெருநாள் பொது உபசரிப்பில் 100,000 முதல் 200,000 வருகையாளர்கள் கலந்து கொண்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த பொது உபசரிப்புகளில் அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டதானது பெருநாள் மகிழ்ச்சியில் மக்கள் பங்கேற்க வேண்டும் என்ற மாநில அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அமைந்தது என்றார் அவர்.

இந்த பொது உபசரிப்பு நிகழ்வுகளின் போது மாநில அரசின் இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தில் உள்ள மக்கள் நலத் திட்டங்கள் குறித்த தகவல்களும் மக்களுக்கு எடுத்துரைக்கப்படும். மேலும் வருகையாளர்கள் இந்த திட்டத்தில் பதிவு செய்வதற்குரிய வாய்ப்பும் வழங்கப்படும் என்று அவர் மேலும் சொன்னார்.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor